
# வாஸ்து சாஸ்திரம்

நமது பூமியானது பெரிய பந்து போல் உள்ளது என்பதை அறிவோம். தென் துருவம், வட துருவம் ஆகிய பகுதிகள் மட்டுமே தட்டையாக உள்ளன. நமது பூமியின் விட்டம் 12 ஆயிரத்து 875 கி.மீ., ஆகும். இதன் சுற்றளவு 40 ஆயிரத்து 234 கி.மீ., ஆனால் உலகமாகிய இந்தப் பந்து நேராக இல்லாமல் தன் அச்சிலிருந்து 23 1/2 கிழக்காகச் சாய்ந்துள்ளது. அதாவது வடகிழக்குத் திசையில் சாய்ந்துள்ளது. உலகம் இப்படி சாய்ந்திருப்பதால் தான், அது இந்தப் பிரபஞ்சத்தில் சூரியனை மையமாகக் கொண்டு ஒரு நீள் வட்டப்பாதையில் சுற்றி வர முடிகிறது.




பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து அண்டங்களின் கலப்பு சக்தி ஈசான்ய திசையிலிருந்தே பூமிக்குக் கிடைக்கிறது. காரணம், பூமி எப்போதும் எந்தக் காலத்திலும், எந்த நிலையிலும் ஈசான்யத்திலேயே லட்சக்கணக்கான மைல் வேகத்தில் ஓடிக் கொண்டே இருக்கிறது.

இதனால் தான் ஈசான்ய திசைக்குப் பெரும் மதிப்பும், சக்தியும் வாஸ்து சாஸ்திரத்தில் கொடுக்கப் பட்டுள்ளன.

நமது இந்திய நாட்டிற்குத் தான் ஈசான்ய மூலை பூகோள அமைப்பின்படி புனிதமானது. இது நாட்டிற்கு நாடு, பூமியின் சுழற்சிப் பாதையை ஒட்டிச் சிறிது மாறுபாடு அடையும் என்பதை நாம் மறக்கக் கூடாது. பூமி, சூரியனைச் சுற்றிச் செல்லும் போது, பூமியின் மேற்பரப்பில், நமது நாட்டின் ஈசான்ய பாகம் சற்று தாழ்ந்தும், தென்மேற்கு பாகம் உயர்ந்தும் இருக்கிறது. எனவே நமது வீட்டினை அமைக்கும் போது, வடகிழக்கு மூலை பள்ளமாக அல்லது தாழ்வாக இருக்க வேண்டும். தென்மேற்குப் பாகம் உயரமாகவும் கனமானதாகவும் இருக்க வேண்டும் என வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.

இதே போன்று மலேசியா, சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகளில் பெங்-சூய் என்ற பெயரில் வாஸ்து சாஸ்திரம் பார்க்கப்படுகிறது. நமது சாஸ்திரங்களுக்கும், அதற்கும் பல வேறுபாடுகள் இருந்தாலும், அடிப்படையில் இரண்டும் ஒரே கருத்தைக் கொண்டிருக்கின்றன. பெங்-சூய் முறையானது அந்த நாட்டின் பூகோள அமைப்புக்கேற்றபடி சிறிது மாறுபட்டிருக்கும். தூரக்கிழக்கு நாடுகளில் எழுப்பப்படும் வானுயர்ந்த கட்டிடங்கள் எல்லாம் பெங்-சூய் சாஸ்திரத்திற்கேற்றபடியே கட்டப் படுகின்றன.

மேலும் பூமி மேற்கிலிருந்து கிழக்காகத் தன்னுடைய அச்சின் மேல் சுழன்று கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இதனால் தான் காலையில் சூரியன் கிழக்கில் உதிக்கிறது. மாலையில்




சுற்றளவு = 40234 கி. மீ.

மேற்கில் மறைகிறது என்பதாக உணர்கிறோம்.

கதிரவனின் கதிரில் ஜீவசக்திகளும் நிரம்பியுள்ளன. மனிதன் மற்றும் சகலவிதமான ஜீவராசிகள் வாழ்வதற்குத் தேவையான சக்திகள் சூரிய ஒளியில் நிரம்பியுள்ளன. அதனாலேயே காலை வேளைகளில் சூரியக்கதிர்கள் வீட்டின் உள்ளே அதிக நேரம் படும்படி வாயில்களையும், ஜன்னல்களையும் அமைக்க வேண்டும். கிழக்கிலும், வடக்கிலும், வடகிழக்கிலும் திறப்புகள் அதிகமாக வைக்க வேண்டும் என வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. அவை நமக்கு வளங்களையும் குடும்ப ஆரோக்கியத்தையும் வாரி வழங்குகின்றன.

மாலை வெயிலில் ஆக்க சக்திகள் குறைவு. அவை உடலுக்கு ஆரோக்கியக் குறைவையும், தீயசக்திகளையும் கொடுக்கின்றன. அதிக நேரம் வீட்டிற்குள் மாலை நேரத்தில் வெயில் வந்தால் தீயபலன்களைச் சூரியக் கதிரில் உள்ள தீய சக்திகள் கொடுக்கின்றன. இதனாலேயே மேற்கிலும், தெற்கிலும் குறைந்த அளவு ஜன்னல்களும், வாயில்களும் அமைத்து, தீய கதிர்களைத் தடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாகக் கன்னி மூலைப் பகுதியில் மட்டும் திறப்புகள் தவிர்க்கப்பட வேண்டும்.

இதனாலேயே நமது வீட்டிற்கும், மனையிடத்திற்கும் தெற்கிலும், மேற்கிலும் பெரிய மரங்களை வைத்து, மாலை வெயிலைத் தடுக்க வேண்டுமென்பதை வாஸ்து சாஸ்திரம் வலியுறுத்துகிறது.

- வளம் வளரும்.

RangaRakes tamilnavarasam.com

## வாஸ்து பகவான் தோன்றிய புராணக் கதை

முன்பொரு காலத்தில் அண்டகா சூரன் என்ற அரக்கன் இருந்து வந்தான். அவன் தான் பெற்ற வரத்தினால் மமதை கொண்டு சிவபெருமானையேப் போருக்கு அழைத்தான். சிவபெருமான் அவனுடன் ஆக்ரோஷமாகப்போரிட்டார். அப்போது அவர் நெற்றியிலிருந்து வழிந்த வியர்வைத் துளியிலிருந்து ஒரு பூதம் ஒன்று தோன்றியது.

கரிய நிறத்தில இருந்த அந்த பூதத்திற்கு அகோர பசியெடுத்தது. கண்ணில் கண்டவர்களையெல்லாம் விழுங்கிக் கொண்டிருந்தது. அண்டகாசூரன் மாண்ட பிறகு அவன் உடலையும் உண்டது. அப்போதும் அதன் பசி அடங்கவில்லை. எனவே தன் பசியைப் போக்கும்படி சிவனிடம் வேண்டியது.

பூதம் கேட்டபடி அது விரும்பியதையெல்லாம் சாப்பிடக் கூடிய வரத்தை அளித்தார் சிவன். பூதம் பெற்ற வரத்தினால் அது மூவுலகையும் அழிக்கும் சக்தி பெற்றிருக்கிறது என்பதை உணர்ந்த தேவர்கள் ஒன்று கூடி பூதத்தை தரையில் கிடத்தி அதன் மேல் 45 கடவுளர்களை அமர்த்தினர். இதனால் பசியடங்காமல் துடித்தது. இந்த இக்கட்டிலிருந்து தன்னைக் காப்பாற்றும் படி பூதம் பிரம்மாவிடம் வேண்டியது. பிரம்மா பூதத்திடம் “உன்னுடைய கோரபசி தணிய வீடு கட்டும்போது மக்கள் படைக்கும் உணவை உண். சாஸ்திரப்படி வீடு இல்லையென்றால் வீட்டில் வசிப்பவரை வாட்டு“ என்று வரம் அளித்தார். அந்த பூதமே வாஸ்து பகவான் என்று அழைக்கப்படுகிறார். அவரே வாஸ்து நியதிகளை உருவாக்கி அதன்படி நடப்பவர்களுக்கு நன்மையும் நடக்காதவர்களுக்கு தீமையும் அளித்து வருவதாகக் கருதப்படுகிறது.

## வியாபாரம், தொழில் செழிக்க வாஸ்து

கடைகளில் வியாபாரம் செழிக்க கீழ்க்கண்ட வாஸ்து வழிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். ஒவ்வொரு திசையைப்

பார்த்த கடைகளுக்கும் ஒவ்வொருவிதமான வாஸ்து நியதிகள் உள்ளன.

கிழக்கு பார்த்த கடை:தரை மட்டம் மேற்கில் சற்று உயர்ந்தும் கிழக்கில் தாழ்ந்தும் இருக்கவேண்டும். காசாளர் தென்கிழக்கு மூலையில் வடக்குப் பார்த்து அமர்ந்திருக்க வேண்டும். பணப் பெட்டி காசாளரின் இடது பக்கம் இருக்க வேண்டும். தென் கிழக்கு மூலையில் கிழக்கு பார்த்து அமர்ந்தால் பணப் பெட்டி காசாளரின் வலது புறம் இருக்க வேண்டும். காசாளர் வடகிழக்கு வட மேற்கு ஆகிய இரண்டு திசைகளிலும் அமரக் கூடாது.

தெற்கு பார்த்த கடை:வடகிழக்கு மூலையை நோக்கி தாழ்வாக தரை அமைக்க வேண்டும். காசாளர் தென் மேற்கு மூலையில் கிழக்கு அல்லது வடக்கு பார்த்து அமரவேண்டும். அவருடைய வலதுபுறம் பணப் பெட்டி இருக்க வேண்டும். வடக்கு நோக்கி அமர்ந்தால் பணப் பெட்டி இடதுபுறம் இருக்க வேண்டும். தென் கிழக்கு அல்லது வட மேற்கு மூலையில் அமரக் கூடாது.

மேற்கு பார்த்த கடை :வடகிழக்கு மூலை சிறிது தாழ்வாக அமைய வேண்டும். காசாளர் தென் மேற்கு மூலையில் வடக்குப் பார்த்து அமர வேண்டும். அவரது இடது கை புறம் பணப் பெட்டியை வைக்க வேண்டும். கிழக்கு பார்த்து அமர்ந்தால் பணப் பெட்டி அவரது வலது புறம் அமைய வேண்டும் வடமேற்கு மூலையிலோ அல்லது தென் கிழக்கு மூலையிலோ, வடகிழக்கு மூலையிலோ அமரக் கூடாது.

வடக்கு பார்த்த கடை: வடகிழக்கு மூலையை சிறிது தாழ்வாக அமைக்க வேண்டும். காசாளர் வடமேற்கு மூலையில் கிழக்கு நோக்கி அமர்ந்தால் பணப் பெட்டியை வலது புறம் அமைக்க வேண்டும். வடக்கு பார்த்து அமர்ந்தால் பணப் பெட்டி அவரது இடது கை புறம் இருக்க வேண்டும். தென் மேற்கு மூலையிலும் அமரலாம். ஆனால் தென் கிழக்கு அல்லது வடகிழக்கு மூலையில் அமரக் கூடாது.

## வாசற்படி:

கடைகளில் வாசற்படியை கடையின் முழு அகலத்திற்கு அமைக்கலாம். கிழக்குப் பார்த்த கடையில் படிகளை வடகிழக்கு மூலையில் அமைக்க வேண்டும். மேற்கு பார்த்த கடைகளில் படிகளை வட மேற்கில் அமைக்க வேண்டும். தெற்கு பார்த்த கடையில் தென் கிழக்கு மூலையில் படிகளை அமைக்கலாம். வடகிழக்கு அல்லது கிழக்கு பார்த்த கடைகளில் வட்டம் அல்லது அரை வட்டம் வடிவமுள்ள கடை தோற்றம் அல்லது படிகள் அமைக்கக் கூடாது.

கதவுகள்:கடையில் இரண்டுக்கும் மேற்பட்ட ஷட்டர்கள் இருக்கும் போது கீழே கொடுக்கப்பட்ட விதிகளின் படி அவற்றைக் கையாள வேண்டும்கிழக்குப் பார்த். த கடைகளில் வடகிழக்கு ஷட்டர் திறந்திருக்க வேண்டும். தென் கிழக்கு ஷட்டர் மூடியிருக்க வேண்டும். இதற்கு எதிர்மாறாக அமைக்கக் கூடாது. இரண்டு ஷட்டர்களும் வேண்டுமானால் திறந்திருக்கலாம்.


தெற்கு பார்த்த கடைகளில் தென் மேற்கு ஷட்டர் மூடியிருக்க வேண்டும். வடமேற்கு ஷட்டர் திறந்திருக்க வேண்டும். இந்த நியதிக்கு எதிர்மாறாகச் செய்யக் கூடாது. மேற்கு பார்த்த கடைகளில் மேற்கு ,வடமேற்கு ஷட்டர்கள் திறந்திருக்க வேண்டும். தென் மேற்கு ஷட்டர்கள் மூடியிருக்க வேண்டும். இதற்கு மாறாக செய்யக் கூடாது. வடக்கு பார்த்த கடைகளில் வடக்கு,வடகிழக்கு ஷட்டர்கள் திறந்திருக்க வேண்டும். வடமேற்கு ஷட்டர்கள் மூடியிருக்க வேண்டும். இதற்கு மாறாக செய்யக் கூடாது.

பூஜை இடம்:கடையின் ஈசான்ய மூலையில் கடவுள் படங்களையோ அல்லது விக்ரகத்தையோ வைக்கக் கூடாது. தென்மேற்கு,தென் கிழக்கு,வடமேற்கு ஆகிய திசைகளில் ஒன்றில் அவற்றை வைத்து தினமும் வழிபட்டு வியாபாரத்தைத் தொடங்க வேண்டும்.

## வாஸ்து பகவான் விழித்திருக்கும் நேரம்

வாஸ்து தேவன் ஒரு சஞ்சார நியதியை அடிப்படையாகக் கொண்டு பூலோகத்தைச் சுற்றி வருவதாக ஐதீகம் கூறுகிறது. பூவுலகத்தை பன்னிரண்டு ராசிகளாக பிரித்து பன்னி ரண்டு ராசிகளுக்கும் பன்னிரண்டு மாதங்களை நிர்ணயம் செய்து மாதம் ஒரு ராசியில் படுக்கை நிலையில் வாஸ்து தேவன் சஞ்சரிக்கிறார். எனவே புதிதாக வீடு கட்ட நினைப்பவர்கள் தாம் கட்டிட வேலையைத் தொடங்கும் மாதத்தில் வாஸ்து தேவனின் சஞ்சார நிலை என்னவென்று பார்க்க வேண்டும்.

வாஸ்து தேவன் படுக்கை நிலையில் சஞ்சரிக்கிறார். அப்படி சஞ்சரிக்கும் போது அவருடைய சிரசு, முதுகு, கால் ஆகிய மூன்று உறுப்புகளையும் விலக்கி விட்டு வயிற்றுப் பாகத்திற்குரிய சுபம் மாதத்தினை கணித்து வீடுகட்டும் பணியை தொடங்குவது சிறப்பு. ஜோதிட சாஸ்திரத்தில் வான் மண்டலத்தில் உள்ள மற்ற கிரகங்கள் பற்றி குறிப்பிட்டாலும் மனிதர்கள் வசிக்கும் பூமியைப் பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லை.



ஆனால் வாஸ்து சாஸ்திரத்தில் பூமிக்கே அதிக முக்கியத் துவம் கொடுக்கப்படுகிறது. எனவே வாஸ்து வழிமுறை களை கடைபிடிப்பது அவசியமாகும். வாஸ்து விஞ்ஞானமும் ஜோதிடமும் கலந்த ஒரு விஷயம். இது கூறும் நியதிகளுக்கு விஞ்ஞானப்

பூர்வமான ஆதரங்களும் உள்ளன என்றும் சிலர் கருதுகின்றனர். வாஸ்து பகவான் வருடத்தின் குறிப்பிட்ட நேரத்தில் விழித்திருப்பார். அந்த நேரத்தில் வீடு கட்டும் பணியையோ அல்லது கடை, தொழிற்கூடங்கள் போன்ற பிற கட்டிடங்கள் கட்டும் பணியையோ தொடங்கும் போது அந்த கட்டிடப் பணி தடையின்றி சிறப்பாக நடைபெறுவதுடன் கட்டிடத்தில் உள்ளவர் களின் வாழ்வு செழிக்கும்.

## வாஸ்து பகவான் விழித்திருக்கும் நேரம் வருமாறு:

தைமாதம்– 12ந்தேதி காலை 9.47–11.47 மணி வரை, மாசி மாதம்– 22ந் தேதி காலை 9.38–11.08 மணி வரை. சித்திரை மாதம்– 10ந் தேதி காலை 8.00 –9.30 மணி வரை. வைகாசி மாதம்– 21 தேதி காலை 9.04–10.34 மணி வரை. ஆடி மாதம்– 11ந் தேதி காலை 8.02–9.32 மணி வரை. ஆவணி மாதம்–6ந் தேதி மதியம் 2.24–3.54 மணி வரை வரை. ஐப்பசி–11ந்தேதி காலை 6.50 –8.20 மணி வரை. கார்த்திகை–8ந் தேதி காலை 10.11–11.41 மணி வரை.

## காலிமனை வாங்கச் செல்லும்போது கவனிக்க வேண்டிய சகுனங்கள்

வீடுகட்ட அல்லது வியாபார நிறுவனங்கள் தொடங்க காலிமனைகள் வாங்கச் செல்லும் போது கவனிக்க வேண்டிய சகுனங்கள் வருமாறு:–

சுப சகுனங்கள்: நீங்கள் காலி மனை வாங்கும் போது கீழ்க்கண்ட சகுனங்களில் ஒன்றை கண்டால் கட்டிடப்பணி சிறப்பாக விரைவில் நடந்தேறி முடியும் என்று அர்த்தம். நாதஸ்வர இசை, ஆலயமணி ஓசை, கல்யாண கோலம், திருமணத்திற்கு பெண் அழைத்துச் செல்லுதல், கோயில் பூஜை, பசுமாடு எதிரில் வருதல், தம்பதிகள் ஜோடியாக எதிரே வருதல், பசு–கன்று சேர்ந்து வருதல், நாய் சந்தோஷமாக விளையாடுதல், திருமணத்திற்குப் பெண் பார்க்கச் செல்லுதல், பூஜைப் பொருட்கள் கொண்டு செல்லுதல், பெண் பூப்படையும் செய்தி,

குழந்தை பிறந்த செய்தி வருதல், அழுக்கு நீக்கியத் துணியை கொண்டு வருதல், தெய்வ விக்கிரகங்கள் வீதி உலா வரும் காட்சி, கன்னிப்பெண் நிறைகுடமாக தண்ணீர் கொண்டு வருதல், பூ மாலை கொண்டு வரும் காட்சி, பிரசவம் முடிந்து குழந்தையை கொண்டு வரும் காட்சி, கிரகப் பிரவேசம், திருமணம், பூணூல் கல்யாணம் ஆகியவற்றைக் காணுதல்

தீய சகுனங்கள்: நீங்கள் காலிமனை வாங்கச் செல்லும் போது கீழ்க்கண்ட தீய சகுனங்களை எதிர் கொள்ளாத வாறுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

சாலையில் சண்டை, தகராறு நடந்து கொண்டிருத்தல், நாய்கள் சண்டையிடுதல், பெண் தலைவிரி கோலமாக வருதல், எலும்புத் துண்டு காணுதல், துக்கச் செய்தி கேட்பது, அலுக்குத் துணியை எடுத்துச் செல்லுதல், இறந்தவர்களுக்கு கருமம் காரியம் செய்யச் செல்வோரைக் காணுதல், குற்றவாளி இழுத்துச் செல்லப்படும் காட்சி, ஒற்றைக் கண் உடையவரைப் பார்த்தல், மரம் சாய்ந்து கிடப்பதைப் பார்த்தல், விபத்துக் காட்சி.

## மனையின் தரம்

ஒரு மனையின் தரம் முதல் தரம் ,இரண்டாம் தரம்,மூன்றாம் தரம்,நான்காம் தரம் என நான்கு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

ஒவ்வொரு தர மனைகளுக்கும் உரிய விளக்கத்தைப் பார்ப்போம்:

முதல் தர மனை:

வடக்கு, கிழக்கு திசையில், நான்கு திசைகளில், வடக்குத் திசையில் மட்டும், கிழக்குத் திசையில் மட்டும் வீதிகள் அமைந்த மனைகள் முதல்தர மனைகள் ஆகும்

இரண்டாம் தர மனைகள்:

வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய மூன்று திசைகளில் வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய மூன்று திசைகளில், வடக்கு, மேற்கு திசைகளில், கிழக்கு, மேற்குத் திசையில், வடக்கு, தெற்கு

திசையில், கிழக்கு, தெற்குத் திசையில் வீதிகள் அமைந்த மனைகள் இரண்டாம் தர மனைகள் ஆகும்.

மூன்றாம் தர மனைகள்:


வடக்கு, மேற்கு, தெற்கு திசைகளில், கிழக்கு, மேற்கு, தெற்கு திசைகளில், மேற்கு திசையில் மட்டும், தெற்கு திசையில் மட்டும், மேற்கு, தெற்கு திசையில் வீதிகள் அமைந்த மனைகள் மூன்றாம் தர மனைகள் ஆகும்.

நான்காம் தர மனைகள்:

நேர் திசையில் அமையாமல் வடகிழக்குத் திசையை நோக்கி அமைந்த மனை, நேர்த்திசையை நோக்கி அமையாமல் வடமேற்கை நோக்கி அமைந்த மனை, நேர்த்திசையை நோக்கி அமையாமல் தென் கிழக்கை நோக்கி அமைந்த மனை ஆகிய வை மூன்றாம்தர மனைகள் என்று வழங்கப்படுகின்றன.

## கட்டிடப் பணியை தொடங்கும் பூஜை

படத்தில் காட்டியுள்ளபடி வட கிழக்குப் பகுதியில் பள்ளம் எடுத்து வடக்குப் பக்கமாகத் திரும்பி ஐந்து சுமங்கலிகள் ஐந்து தண்ணீர் குடத்துடன் ஒன்றன் பின் ஒன்றாக நின்று பள்ளத்தில் மஞ்சளும் குங்குமமும் கலந்த தண்ணீரை ஊற்ற வேண்டும். வரை படத்தில் காட்டியபடி வாழை இலை, சுவாமிப்படம் செங்கல் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாக கிழக்கு நோக்கி அமைத்துக் கொண்டு வாழையிலையில் தண்ணீர் தெளித்து பின்பு அவல் பொரி கடலை, கடலை, அரைகிலோ நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றை கலந்து வாழையிலையில் வைக்க வேண்டும். பின்பு சுவாமி படத்திற்கு குடும்பத் தலைவி நெய் அல்லது நல்லெண்ணெய் விளக்கை ஏற்ற வேண்டும்.




மனை உரிமையாளரின் தாய், மனைவி, மாமியார் ஆகிய மூன்று பேரில் ஒருவர் விளக்கை ஏற்ற வேண்டும். சுவாமி படத்தின் முன் வாழை இலையில் நாம் விருபப்படும் 3 வகை கனிகள் வைத்து இரண்டு தேங்காய் உடைத்துத் தண்ணீர் சிதறாமல் வைக்கவும். அப்படியே தண்ணீர் சிதறி விட்டால் உடைத்த தேங்காய் உள் பகுதியில் நல்ல தண்ணீரை ஊற்றி வைக்க வேண்டும். பின் கற்பூரம் ஏற்றி உதிரிப் பூக்களைக் கொண்டு 108 முறை வாஸ்து காயத்திரி மந்திரம், வாஸ்து அஷ்டோத்திரம் கூறி ஒவ்வொரு முறையும் வாஸ்து பகவான் பாதத்தில் மலர் தூரவ வேண்டும். பூஜை செய்யும் பள்ளத்தில் உதிரிப் பூக்கள், மஞ்சள், குங்குமம் இடவேண்டும். பிறகு மூத்தவர்கள் முதலிலும் இளையவர்கள் இரண்டாவதும் தீபாரதனைச் செய்ய வேண்டும்.

பிறகு காலி மனையில் முதலில் நான்கு எலுமிச்சம் பழம், கற்பூரம், எடுத்துக் கொண்டு தென் மேற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு, வடமேற்கு ஆகிய நான்கு பகுதிகளில் எலுமிச்சம் பழத்தின் மீது கற்பூரம் வைத்து ஜுவாலையுடன் தீபாரதணைக் காட்டி அதே இடத்தில் கற்பூரத்தைப் போட்டு எலுமிச்சம் பழத்தை இரண்டாகப் பிழிந்து தரையில் போட வேண்டும். அதன் பின் தாம்பூலத் தட்டில் பூஜை செய்த பிரசாதத்தை வைத்து அஷ்ட திக்கு பாலகர்களை மனதில் நினைத்து மனையில் குறியிட்ட

எட்டுத் திசைகளிலும் குங்குமம், மஞ்சள், பூ ஆகியவற்றை பூமி யில் இட வேண்டும்.

பிறகு பிரசாதத்தையும் பூமியில் இட வேண்டும். அதன் பிறகு மனையின் மத்தியப் பகுதியில் குங்குமம், மஞ்சள்பூ ஆகியவற்றை இட வேண்டும். அதன்பின் கட்டிட நிபுணர் 9 சுமங்கலிகள் கையால் பூஜை செய்த செங்கற்களை வாங்கி பூஜை செய்ய எடுத்த பள்ளத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி முறையாக அடுக்கி வைக்க வேண்டும். பிறகு நவதானியங்களைப் போட்டு கற்பூரதீபம் காட்ட வேண்டும். பூஜை முடிந்த பின்பு பூஜைக்கு வந்த அனைவரும் கிழக்குமுகமாக நின்று உதவியாளர் ஒருவரை அழைத்து எலுமிச்சம் பழம்,தேங்காய், பூசணிக்காய் ஆகிய மூன்றிலும் கற்பூரம் வைத்து ஒன்றன் பின் ஒன்றாக முறையாக திருஷ்டி சுற்றி மனையின் முன் தெருவில் போட்டு உடைக்க வேண்டும்.

பூஜை செய்த செங்கற்களை கட்டிடம் அமைக்கும் போது தென் மேற்கு அல்லது வடகிழக்கு பாகத்தில் வைத்து கட்ட வேண்டும். வாஸ்து விழிக்கும் நேரத்தை 5 பாகமாகப் பிரித்து நான்குபாக நேரத்தில் பூஜைக்கான ஏற்பாடுகளை செய்து முடித்துவிட்டு 5வது பாக நேரத்தில் பூஜை செய்து முடிக்க வேண்டும். இது போன்று முறையாக வாஸ்து பூஜை செய்து கட்டிப்பணியைத் தொடங்கும்போது வீடு கட்டும் பணி தடையின்றி நடந்தேறும். வீட்டில் உள்ளவர்கள் வாழ்வு சிறக்கும். அஷ்ட திக்கு பாலகர்கள் வீடு கட்டுவதற்கு உதவியாகயிருப்பார்கள். சகல ஐஸ்வர்யங்களும் வீட்டில்உள்ளவர்களுக்குக் கிடைக்கும்.

## வாஸ்து பகவான் காயத்திரி மந்திரம்

ஓம் அனுக்ரகரூபாய விதமஹே

பூமி புத்ராய தீமஹி

தந்நோ வாஸ்து புருஷ ப்ரசோதயாத்

அஷ்டதிக்கு பாலகர் துதி

அஷ்டதிக்கு பாலகர் ஈசானியா போற்றி

வளம் தரும் குபேரனே போற்றி

உயிர் காக்கும் வாயு பகவானே போற்றி

பசுமை தரும் வருணனே போற்றி

அருள்மிகு நிருதி பகவானே போற்றி

தருமவான் மிருத்யூ போற்றி

சுப அக்னி பகவேனே போற்றி

உயர்வைத் தரும் இந்திரனே போற்றி

காக்கும் பிரம்மஸ்தான பகவானே

போற்றி போற்றி போற்றி!

## ஒவ்வொரு பகுதி அறையின் சிறப்புகள்

வீட்டின் ஒவ்வொரு பகுதியில் அமையும் அறைகளின் சிறப்பையும், அதை கையாள வேண்டிய முறையையும் பார்ப்போம்.

வடகிழக்கு பகுதி:—

வீட்டில் உள்ள எட்டுத் திசைகளில் வடக்கு,கிழக்கு திசைகள் சந்திக்கும் வடகிழக்குத் திசையே அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. இது ஈசன் வசிக்கும் பகுதியாகும். எனவே இது ஈசான்ய மூலை என்றும் அழைக்கப்படுகிறது. இந்த வடகிழக்குப் பகுதியில் அமையும் அறையை மிகவும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.



பூஜை அறை அமைப்பதற்கு மிகவும் பொருத்தமான பகுதி வடகிழக்குப் பகுதியாகும். முடிந்தவரை இந்த அறையில் பாரங்களை ஏற்றக்கூடாது. இந்த அறையில் நல்ல காற்றோட்டம் இருக்கிற மாதிரியும், நன்றாக சூரிய ஒளி வருகிற மாதிரியும் பார்த்துக் கொண்டால் வீட்டில் செல்வ வளம் அதிகரிக்கும் சகல ஐஸ்வர்யங்களும் நம்மை வந்து அடையும்.

மற்ற பகுதியில் உள்ள தரைத் தளங்களைவிட இந்த வட கிழக்கு அறையின் தரைத் தளம் சற்று பள்ளமாகவே இருக்க வேண்டும். வடகிழக்கு அறையில் கண்டிப்பாக சமையல் அறை அமைக்கக் கூடாது. இதனால் தீய பலன்கள் விளையும். தினமும் ஐந்து முறை இந்த அறையை நல்ல தண்ணீரால் கழுவி சுத்தப்படுத்த வேண்டும்.

இதனால் எடுத்த காரியத்தில் வெற்றிகிடைக்கும். வடகிழக்கு அறையில் தெற்கு, தென் கிழக்கு பகுதியில் நுழைவு வாயில் அமைத்துக்கொள்ள வேண்டும். இளம் வயதினர் இந்த அறையில் தூங்கும் போது அவர்கள் நல்ல சுறுசுறுப்பானவர் களாகவும், ஆரோக்கியமானவர்களாகவும் இருப்பர். நோய்வாய்ப்பட்டவர்கள் இந்த அறையில் தூங்கி எழுந்தால் விரைவில் அந்நோய் நீங்கும். சுப காரியங்கள், புதிய முயற்சிகள், வேலைக்கு விண்ணப் பித்தல்,பரிட்சைக்குப் படித்தல் போன்றவற்றை இந்த அறையில் வைத்து செய்யும்போது அதில் நல்ல வெற்றி உண்டாகும்.

தென்கிழக்குப் பகுதி

வீட்டில் தெற்கு,கிழக்கு திசைகள் சந்திக்கும் தென்கிழக்குப் பகுதி. இது வாயு பகவான் குடி கொண்டிருக்கும் பகுதி. சமையலறைக்குரியப் பகுதியாகும். இங்கு சமையல் அறை அமைக்கும்போது குடும்பத்தில் சண்டைச் சச்சரவுகள் இன்றி ஒற்றுமை நிகழும். சுப காரியங்கள் தடையின்றி நிகழ்ந்தேறும். குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியம் மேலோங்கும்.

இந்த அறையின் தளம் தெற்கு, மேற்கு பகுதி சற்று உயரமாகவும், வடக்கு, கிழக்குப் பகுதி சற்று தாழ்வாகவும் இருக்குமாறுப் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த அறையின் கிழக்கு, வடகிழக்கு, தெற்கு, தென் கிழக்குப் பகுதியில் ஜன்னல்கள் அமைப்பது சிறப்பு. தென் கிழக்குப் பகுதிஅறையை படுக்கும் அறையாகப் பயன்படுத்துவதைத் தவர்க்க வேண்டும். இதனால் விரயச் செலவு, அதிகமான மருத்துவச் செலவு, குடும்பத்தில் சண்டைச் சச்சரவு போன்றவை உண்டாகும்.

வடமேற்கு பகுதி

வீட்டில் வடக்கு, மேற்குப் திசைகள் சந்திக்கும் வடமேற்கு பகுதியை வாயு பகவானுக்கு உரியப் பகுதியாக வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. வடமேற்கு பகுதி அறையை பெண்கள் தங்கும் அறையாக பயன்படுத்திக் கொள்ளலாம். இது பெண்களுக்குரிய அறையாகும். திருமணம் தடைபட்டு வரும் இளம் பெண்கள் இங்கு அதிக நேரம் தங்கியிருக்கும் போது அவர்களுக்கு விரைவில் திருமணம் நடந்தேறும்.

விலைபோகாத பொருட்கள் மற்றும் சொத்துக்களின் தஸ்தாவேஜ்களை இந்த அறையில் வைத்திருக்கும்போது அது காற்று வேகத்தில் விரைவில் விற்பனையாகும் என்பது வாஸ்து ஐதீகம். வெளிநாடு செல்ல விருப்பமுள்ளவர்கள் வடமேற்கு அறையில் தங்கினால் அவர் களின் கனவு விரைவில் நிறைவேறும். வடமேற்கு பகுதி அறையை விருந்தினர் களை உபசரிக்கும் அறையாகவும் பயன்படுத்திக் கொள்வது சிறப்பாகும்.

தென் மேற்கு பகுதி

வீட்டில் தெற்கு,மேற்கு திசைகள் சந்திக்கும் இந்தப் பகுதி நிருதி பகவான் தங்கியிருக்கும் அறையாகும். இதை நிருதி அறை என்றும் அழைப்பார்கள். நம் வாழக்கையில் நிகழும் நன்மை,தீமை,உடல் ஆரோக்கியம்,வாழ்க்கைத் தரம் போன்றவற்றை தீர்மானிக்கும் சக்தி தென் மேற்கு அறைக்கு உண்டு. இந்த பகுதியில் அமையும் அறையை பாரமான,கடினமான,உயரமான பகுதியாக அமைத்துக் கொள்வது சிறப்பு. இந்த அறையின் சுவர்கள் 90 டிகிரிக்கு செங்குத்தாக இருக்க வேண்டும்.

இங்கு குறைந்த பட்சம் ஒரு பரணையாவது அமைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்த அறை மற்ற அறைகளைவிட கொஞ்சம் பாரமானதாக இருப்பது நல்லது. கிழக்கு,வடக்கு, பாகத்தில் இந்த அறையின் நுழைவு வாயிலை அமைத்துக்கொள்ளலாம். இந்த அறையை குடும்பத் தலைவன் அல்லது வீட்டிற்குத் தலைமகன் ஆகியவர்கள் படுத்து எழுந்திருக்கும் அறையாகப் பயன்படுத்துவது சிறப்பு. தினமும் மாலை 6 மணி முதல் மறுநாள் சூரிய உதயம்வரை இந்த அறையில் எண்ணெய் விளக்கு எரியும்படிப் பார்த்துக் கொண்டால் வீட்டின் தலைவனுக்கோ,தலைமகனுக்கோ எந்த ஆபத்தும் நிகழாது.

வடக்கு மத்தியப் பகுதி

வீட்டின் வடக்குப் திசையின் மத்தியில் அமையும் வடக்கு மத்தியப் பகுதி அறை செல்வத்திற்கு அதிபதியான குபேரன் தங்கியிருக்கும் அறையாகும். எனவே இந்தப் பகுதிக்கு வீட்டில் செல்வ வளத்தை உண்டு பண்ணும் சக்தி உண்டு. இந்த அறையின் தெற்கு ,மேற்கு ,தென் மேற்கு சுவர்களில்கபோடுகள் வைத்து அதில் பணம்,நகை போன்றவற்றை வைத்து புழங்குவது வீட்டின் செல்வ செழிப்பை அதிகரிக்கும். எப்போதும் தாராளமான பணப்புழக்கம் இருந்து கொண்டேயிருக்கும். பெண்கள் மற்றும் இளைய தலைமுறையினர் தங்கும் அறையாக இந்த அறையைப் பயன் படுத்திக் கொள்ளலாம். வடகிழக்கு அறைக்கு அடுத்ததாக அதிக முக்கியத்துவம் கொடுத்து மிகவும் தூய்மையாக

பாதுகாக்க வேண்டியப் அறை வடக்கு மத்தியப் பகுதி அறையாகும். இதை படிக்கும் அறையாகவும்,கம்ப்யூட்டர் போன்றவற்றை பயன்படுத்தும் அறையாகவும் பயன்படுத்தினால் மாணவர்களின் கல்வி சிறக்கும். இந்த அறையில் பரண்கள் இல்லாமல் இருப்பது நல்லது.

கிழக்கு மத்தியப் பகுதி

வீட்டின் கிழக்கு திசையின் மத்தியப் பகுதியில் அமையும் இந்த பகுதி இந்திரனுக் குரிய பாகமாகக் கருதப்படுகிறது. இது வீட்டுக் குழந்தைகளின் எதிர் காலம், அவர்களின் உயர்வு,வாழ்க்கை போன்ற வற்றைத் தீர்மானிக்கிறது. இந்தப் பகுதியை விட்டுக் குழந்தைகள் அதிகம் புழங்கும் அறையாகப் பயன்படுத்த வேண்டும். அவர்கள் படிக்கும்,படுக்கும் அறையாகப் பயன்படுத்தலாம். இந்தப் பகுதி அறையின் கிழக்கு,வடக்குப் சுவரில் ஜன்னல் அமைக்க வேண்டும். இந்த அறையின் வட கிழக்குப் பகுதியில் எந்தப் பொருளையும் வைக்கக் கூடாது. இந்த அறையில் சூரிய ஒளி, காற்றோட்டம் இருக்குமாறுப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு வீட்டில் கிழக்கு மத்தியப் பகுதி அறை அந்த வீட்டின் இளையகுமாரர்களுக்கு ஏற்றதாகக் கருதப்படுகிறது.

தெற்கு மத்தியப் பகுதி

ஒரு வீட்டின் தெற்கு திசையின் மத்தியப் பகுதி வாஸ்து சாஸ்திரத்தில் எமனுக்குரிய பாகமாகக் கருதப்படுகிறது. இந்த அறையில் குடும்பத்தின் இரண்டாவது வாரிசுகள் தங்குவது சிறப்பு. பூஜை அறையாகவும் பொருட்கள் வைக்கக்கூடிய அறையாகவும் இந்த அறையைப் பயன்படுத்தலாம். இந்த அறையில் கிழக்கு அல்லது வடகிழக்குப் பகுதிகளில் நுழைவு வாயில் அமைக்க வேண்டும். இந்த அறையில் வடகிழக்குப் பகுதியில் ஒட்டடைக் கம்பு, துடைப்பம் போன்றவற்றை வைக்கக் கூடாது. இந்த அறையின் தென் மேற்குப் பகுதியில் கபோடு அமைப்பது சிறப்பைத் தரும்.

மேற்கு மத்தியப் பகுதி

வீட்டின் மேற்கு திசையின் மத்தியில் அமைந்துள்ள இந்தப் பகுதி வருண பகவா னுடையப் பகுதியாகக் கருதப்படுகிறது. இந்த அறையை பூஜை அறையாகவோ பொருட்கள் வைக்கும் அறையாகவோ அல்ல து இரண்டாவது மகன் அல்லது மரு மகன் தங்கும் அறையாகப் பயன் படுத்திக் கொள்ளலாம். இந்த அறையில் தெற்கு, மேற்கு சுவர்களில் பரண் அமைப்பது சிறப்பானப் பலன்களைத் தரும். இந்த அறை யின் தென்மேற்கு சுவரில் கபோடு அமைப்பது வீட்டிற்கு நன்மைகள் பல பெற்றுத் தரும்.

## பணப் பெட்டி வைக்கும் அறை

வீட்டில் பணப் பெட்டி வைக்கும் அறையை சரியாகத் தேர்ந்தெடுப்பது முக்கியம். வீட்டின் செல்வச் செழிப்பு இந்த அறையைதான் அதிகம் சார்ந்துள்ளது. வடக்கு மத்தியப் பகுதி குபேரனுக்கு உரிய அறையாகும். எனவே இந்த அறையில்தான் பணப் பெட்டியை வைக்க வேண்டம்பணப்பெட்டி வடக்கு. நோக்கி இருக்குமாறுப் பார்த்துக் கொள்ள வேண்டும். வடக்கு திசைக்கு அடுத்தபடியாக தெற்கு திசை அறையில் பணப் பெட்டியை அமைக்கலாம். வடகிழக்கு அறையில் பணப் பெட்டியை வைக்க நேர்ந்தால் அந்த அறையின் தென் மேற்கு மூலையில் அதை வைக்க வேண்டும்வடமேற்கு மூலையில் வைக்க நேர்ந்தால் பணப்பெட்டியை வடக்குச் சுவரை தொடாத வகையில் வைக்க வேண்டும். தென் கிழக்கு அறையில் பணப் பெட்டியை எக் காரணம் கொண்டும் வைக்கக் கூடாது. அப்படி வைத்தா பண விரயம் அதிகமாக இருக்கும்.

பணப்பெட்டி நல்ல கனமாக இருப்பது அவசியம். பணப்பெட்டியை ஒரு அலமாரியில் வைப்பதாகயிருந்தால் அது தெற்குச் சுவரையேஅல்லது மேற்குச் சுவரையோ தொட்டுக் கொண்டிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பணப் பெட்டி வைக்கும் அறையின் கதவு ஒற்றைப் படையில் இருப்பது நல்லது. இதனால் பணப் பெட்டியில் வைக்கும் பணம் நாளுக்கு நாள்

பெருகும். பணப் பெட்டி அறையின் நுழைவு வாயில் வடக்கு,கிழக்கு,வடகிழக்குத் திசைகளில் இருப்பது நலம். வீட்டின் தென்மேற்கு அறையின் தென் மேற்கு மூலையும் பணப் பெட்டி வைப்பதற்குப் பொருத்தமான அறையாகும். இங்கு பணப் பெட்டி வைத்தாலும் செல்வம் பெருகும்.

பணத்தை அலமாரியில் வைக்கும் போது அதில் கனமான பொருள் எதுவும் இல்லாதவாறுப் பார்த்துக் கொள்ள வேண்டும். அலமாரியில் பணத்தை மேல் தட்டிலோ அல்லது நடுத்தட்டிலோதான் வைக்க வேண்டும். கீழ்த் தட்டில் கண்டிப்பாக வைக்கக் கூடாது. பணத்தையும் துணியையும் ஒரே பெட்டியில் வைக்கக் கூடாது. பணப் பெட்டியில் வாசனை திரவியங்களை போட்டு வைக்கக் கூடாது. பணப் பெட்டி ஆடாமல் அசையாமல் இருக்கும்படி அதை உறுதியாக நிறுத்த வேண்டும். பணப் பெட்டியை முழுவதும் காலி செய்து விடாமல் அதில் ஒரு ரூபாயாவது போட்டு வைக்க வேண்டும். பணப் பெட்டியை எப்போதும் தூய்மையாக வைக்க வேண்டும்.

## ஜன்னல்கள்

ஜன்னல்களை கதவுகள் தயாரிக்கப் பயன் படுத்திய அதே வகையான மரத்தினாலேயே செய்வது மிகவும் சிறந்த பலன்களைத் தரும். ஜன்னல்களை வெள்ளிப்பக்கமாகத் திறக் கும்படி அமைக்க வேண்டும். வீட்டின் வடக்கு, கிழக்குச் சுவர்களில் தெற்கு,கிழக்குச் சுவர்களில் வைப்பதைவிட அதிகமான ஜன்னல்களை அமைக்க வேண்டும். வீட்டின் வடக்கு மற்றும் தெற்குச் சுவரில் ஜன்னலே வைக்காமல் இருக்கக் கூடாது.



அப்படி வைக்காமல் இருந்தால் வீட்டில் உள்ளவர்களின் ஆரோக்கியம் பாதிக்கும். ஜன்னல் களின் எண்ணிக்கை இரட்டைப்படையில் அமைய வேண்டும். ஆனால் பத்து, இருபது,முப்பது,நாற்பது போன்ற எண்ணிக்கைகளில் ஜன்னல்களை அமைக்கக் கூடாது. தலைவாசலுக்கு இரண்டு பக்கங்களிலும் ஜன்னல்கள் வைப்பது நல்லது.

இது வீட்டில் உள்ளவர்கள் நோய்வாய்ப் படுவதைத் தடுக்கும் மேலும் இவ்வாறு இரண்டு ஜன்னல் வைக்கவில்லை என்றால் வீட்டில் பொருளாதாரச் சிக்கல் அடிக்கடித் தலை தூக்கும். குறைந்த பட்சம் தலை வாசலின் ஒரு பக்கமாவது ஜன்னல் அமைத்துவிட வேண்டும்.



பெரிய வீடுகளில் பெரிய ஜன்னல் களையும், சிறிய வீடுகளில் சிறிய ஜன்னல்களையும் அமைக்க வேண்டும். மாற்றி அமைக்கக் கூடாது. அவ் வாறு செய்யும் பட்சத்தில் குடும்பத்தில் உள்ளவர்கள் வியாதிகளால் அவதியுறு வார்கள்.

ஜன்னல்கள் கதவு களைப்போல் மனித உட்புகுதல் இல்லாத பகுதியாக இருப்பதால் ஜன்னல்களின் சக்தி கதவுகளின் சக்தியைவிட குறைவானது என்று வாஸ்து சாஸ்திரம் கருதுகிறது.

## குளியலறை

குளியலறை படுக்கை அறைக்குக் கிழக்கிலோ அல்லது வடக்கிலோ அமைந்திருக்க வேண்டும். படுக்கை அறையின் தளமட்டத்தை விட குளியலறையின் தள மட்டம் சிறிது தாழ்வாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒருவேளை படுக்கை அறைக்கு மேற்கிலோ, கிழக்கிலோ குளியலறை அமைந்திருந்தால் அந்த குளியலறையின் தள மட்டம் படுக்கை அறையின் தள மட்டத்தைவிட சிறிது உயர்வாக இருக்கும்படி அமைத்து வாஸ்து குறையை நிவர்த்தி செய்ய வேண்டும்.



வீட்டின் எண் திசைகளில் குளியலறை அமைப்பதால் உண்டாகும் நன்மை தீமைகளைப் பார்ப் போம். வடக்கு:

நன்மையான பலன்களே உண்டாகும், வடகிழக்கு: இதுவும் நற்பலன்களையேத்தரும்,

தெற்கு: சிறப்பானபலன்கள் உண்டாகும். தென்கிழக்கு:இங்கு குளியலறை அமைக்கக் கூடாது அவ்வாறு அமைக்கும் பட்சத்தில் வீட்டில் வசிக்கும் பெண்களுக்கு தீமை உண்டாகும். அவர்களுக்கு மாதவிலக்குக் கோளாறு, கர்ப்பப்பைக் கோளாறு உண்டாகும்.

மேற்கு: நன்மையானப் பலன்களே உண்டாகும்.

வடமேற்கு: எண் திசைகளில் குளியலறை அமைக்க மிகப் பொருத்தமான அறை வடமேற்கு அறையே. இங்கு குளியலறை அமைப்பதினால் பல்வேறு நன்மைகள் நடக்கும். வீட்டில் சுப காரியங்கள் தடையின்றி நடந்தேறும். கிழக்கு– நன்மை, தென்மேற்கு– நன்மை.

குளியலறையையும் கழிவறையையும் சேர்த்து அமைக்கும் பட்சத்தில் தண்ணீரைச் சூடாக்கும் பாய்லறை தென்கிழக்கு மூலையில் வைக்க வேண்டம். தண்ணீர் வரும் குழாயை வடகிழக்குச் சுவரில் பதிக்க வேண்டும். கை கழுவும் தொட்டியைக் கிழக்குச் சுவரில் பதிக்க வேண்டும்.


முகம் பார்க்கும் கண்ணாடியை வடக்குச் சுவர் அல்லது கிழக்குச் சுவரில் பதிக்கலாம். துணிகளை மாட்டுவதற்கான கொக்கியைக் தெற்கு அல்லது மேற்குச் சுவரில் பொருத்த வேண்டும். படுகை அறைக்குள் குளியல் மற்றும் கழிப்பறையை அமைக்கும்பட்சத்தில் கழிவறையை வடமேற்கு மூலையில் அமைக்க வேண்டும்.

## படுக்கை அறை

வீட்டில் ஒரே ஒரு படுக்கை அறை அமைக்கும் போது தென் மேற்கு அறையைப் படுக்கை அறையாகப் பயன்படுத்த வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட படுக்கை அறை அமைப்பதாகயிருந்தால் தெற்கு அல்லது மேற்கில் அவற்றை கூடுதலாக அமைத்துக்

கொள்ளலாம். வீட்டின் வடகிழக்குத் திசையில் படுக்கை அறை அமைக்கக் கூடாது.

அப்படியே அங்கு படுக்கை அறை அமைத் தாலும் அதில் குழந்தை கள்தான் படுக்க வேண்டும். இதேபோல் வீட்டின் வடக்கில் படுக்கை அறையை அமைத்தால் வருமானம் திருப்திகரமாக இருக்காது. வயதில் மூத்தவர்கள் தென் மேற்கில் அமையும் படுக்கை அறையிலும், இளைய வர்கள் தெற்கிலும், மேற்கிலும் அமையும் படுக்கை அறையிலும் படுக்க வேண்டும். தென் கிழக்கில் அமையும் படுக்கை அறையை கன்னிப் பெண்கள், பெண் குழந்தைகள் போன்றவர்கள் பயன்படுத்தலாம். திருமணமானவர்கள் அதைத் தொடர்ந்து பயன்படுத்தக் கூடாது.



வடக்குத் திசையில் கண்டிப்பாகத் தலை வைத்துப் படுக்கக் கூடாது. தெற்கு, மேற்கு, கிழக்கு திசைகளில் தலை வைத்துப் படுப்பது நல்லது. உத்திரத்திற்கு நேர் கீழே படுக்கக் கூடாது. ஏரி, குளம், கடல், ஆறு போன்ற நீர் நிலைகளை நோக்கி படுக்கை அறை அமைக்கக் கூடாது. மேல் மாடியில் படுக்கை அறை அமைக்கும் போது அதற்கு நேர் கீழே சமையல் அறை இருக்கக் கூடாது.

உயர் பதவிகளை வகிப்பவர்கள் மேற்கே தலை வைத்தும் விஞ்ஞானிகள் மற்றும் கலைத்துறை, எழுத்துத் துறையைச் சேர்ந்தவர்கள் கிழக்கில் தலை வைத்துப் படுக்க வேண்டும்.

## படிக்கும் அறை

வீட்டில் படிக்கும் அறையையோ அல்லது சிறிய நூலகத்தையோ அமைக்கும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் வருமாறு:

வீட்டில் படிக்கும் அறை அல்லது நூலகத்தை மேற்கு திசையில் அமைப்பது நல்லது. அந்த அறையில் கிழக்கு நோக்கிய படி நாற்காலியைப் போட்டுக் கொண்டுப் படிக்க வேண்டும். வடக்கு நோக்கியும் நாற்காலியை போட்டுப் படிக்கலாம். ஆனால் அப்போது தெற்குச் சுவருக்கு ஒட்டினாற் போல நாற்காலியைப் போட வேண்டும்.

மேற்குத் திசைக்கு அடுத்தபடியாக கிழக்கு, வடகிழக்கு, வடமேற்கு திசையில் அமையும் அறையில் படிப்பறையை அமைக்கலாம். புத்தக அலமாரிகள் தெற்கு அல்லது மேற்குச் சுவருக்கு அருகில் இருக்க வேண்டும். படிப்பறையின் நிறத்திற்கும் வாஸ்து விதிகள் உண்டு. இந்த அறைக்கு சுண்ணாம்பு அடிக்க வேண்டும் என்றால் அதில் இளமஞ்சள்,இளம்பச்சை, இளமஞ்சள் ஆகியவற்றில் ஏதாவது ஒரு வண்ணத்தை கலந்து அடிக்க வேண்டும்.

வீட்டின் வடகிழக்கு அறையை படிக்கும் அறையாகப் பயன் படுத்துவதாகயிருந்தால் அதில் போடப்படும் நாற்காலி,மேஜைகள் அதிக எடை கொண்டதாக இருக்கக் கூடாது. படிக்கும் அறைக்குள் முகம் பார்க்கும் கண்ணாடி,மீன் தொட்டி ஆகியவற்றை வைக்கக் கூடாது. இந்த அறைக்குள் சூரிய வெளிச்சம் நேராக வந்து விழக் கூடாது. படிக்கும் அறையில் வாஸ்து முறைகளை கடைபிடிக்கும் போது அதில் அமர்ந்து படிக்கும் விஷயங்கள் எல்லாம் நன்றாக மனதில் பதியும். இந்த அறை சரஸ்வதி வாசம் செய்யும் அறை என்பதால் தூய்மையாக இருக்க வேண்டும்.

## பூஜை அறை

பூஜை அறை அமைப்பதற்கு மிகச் சிறந்த திசை வடகிழக்கு மூலையாகும். வடக்கு, கிழக்குத் திசைகளிலும் அமைக்கலாம்.

பூஜை அறை யின் உட்கூரைப்பகுதி வீட்டின் உட்கூரைப் பகுதியைவிட தாழ்வாகயிருக்க வேண் டும். பூஜை அறையின் கதவை உச்சத்தில் அமைக்க வேண்டு. இந்த அறைக்கு இரட்டைக் கதவுகள்தான் போட வேண்டும். கதவுகளில் சிறுசிறு துவாரங்களை அமைத்து அத்துவாரங்களில் மணிகளைத் தொங்கவிடும் போது மிகவும் சிறப்பான பலன்கள் உண்டாகும். சகல ஐஸ்வர்யங் களையும் அந்த மணியோசை வீட்டிற்குள் கொண்டு வரும். பூஜை அறையின் வடக்கில் ஒரு ஜன்னலை வைக்க வேண்டியது அவசியம். அப்படி ஜன்னல் அமைக்கும்போது அதன் வழியே சூரிய ஒளி பூஜை அறைக்குள் வரும். இதனால் நன்மைகள் மேலோங்கும்.



பூஜை அறையின் வடகிழக்குப் பகுதியில் அதிக பாரத்தை ஏற்றக் கூடாது. பூஜை அறைக்குள் மாடம் அமைக்கும் பட்சத்தில் அது வடகிழக்கு மூலையில் அமையக் கூடாது.

பூஜை அறையின் மேற்குச் சுவரில் ஜன்னல் வைக்கக் கூடாது. இங்கு பூஜை சம்பந்தப்பட்ட பொருட்கள், விக்ரகங்கள்,படங்களைத் தவிர வேறு எதையும் வைக்கக் கூடாது. படுக்கை அறை,கழிவு அறைப் பக்கத்தில் பூஜை அறை அமையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கடவுள் படங்களை மேற்கு அல்லது தெற்குச் சுவரில் மாட்ட வேண்டும். அப்போதுதான் அவை முறையே கிழக்கு அல்லது வடக்கு திசை நோக்கியிருக்கும். சுவாமி படங்கள் மாட்டப்

பட்டிருக்கும் உயரத்திற்கு மேலே எந்த ப் பொருளும் இருக்கக் கூடாது.

ஆஞ்ச நேயர் படத்தை தெற்கு திசை நோக்கி வைக்க வேண்டும். விளக்குகளை தெற்கு அல்லது வடக்கு நோக்கி வைக்கக் கூடாது. ஈசானியத்தில் பூஜை அறை அமைக்கும் பட்சத்தில் அதில் இறந்த முன்னோர்களின் படங்களை மாட்டக் கூடாது என்று ஒரு நியதி இருக்கிறது.

பூஜை அறையில் கடவுள்களின் உருவத்திற்கு மலர்கள் போடும்போது அந்த கடவுள்களின் முகமும் பாதமும் மலர்களால் மறைந்து விடாதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## சமையல் அறை

வீட்டில் சமையல் அறையை அக்கினி பகவான் மூலையான தென் கிழக்கு மூலையில் அமைக்க வேண்டும். சமையல் அறை அமைப்பதற்கு இதுவே மிகவும் பொருத்தமானப் பகுதி. இதனால் வீட்டில் ஐஸ்வர்யம் பெருகும். எக்காரணம் கொண்டும் ஈசான்ய மூலையான வடகிழக்கு மூலையில் சமையல் அறையை அமைக்கக் கூடாது. அவ்வாறு அமைப்பது வீட்டில் உள்ள செல்வத்தை எரிப்பதற்குச் சமம்.



இதனால் வறுமை வீட்டை ஆட்டிப் படைக்கும் நம் அத். தியாவசியத் தேவைகளில் ஒன்றான உணவு தயாரிக்கப்படும் இடம் என்பதால் வாஸ்து அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறதுஅடுப்பை சமையல் அ. றையின் தென் கிழக்கு

மூலையில் வைக்க வேண்டும். சமைக்கும்போது சமைப்பவர் கிழக்கு நோக்கி நின்று சமைக்குமாறு சமையல் அறையை அமைக்க வேண்டும். அடுப்பு வைக்கும் இடத்தை கூண்டு போல் அமைத்துக் கொள்ளக் கூடாது. சமைப்பவரின் வலது புறத்தில் பாத்திரம் கழுவும் தொட்டியை வைக்க வேண்டும். தெற்கு,மேற்கு சுவரில் பரண்,கபோடு அமைக்க வேண்டும். எண் திசைகளில் சமையல் அறை அமைவதால் ஏற்படும் நன்மை தீமை களைப் பார்ப்போம்.

கிழக்கு:வம்ச விருத்தி,குடும்பத் தலைவியின் உடல் நலம் பாதிக்கப் படும்.

தென் கிழக்கு:உணவில் சுவை அதிகமாக இருக் கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் எந்தத் தடையுமின்றி சுபமாக நடந்தேறும். செல்வம்

பெருகும். தெற்கு: வருமானத்தைவிட செலவுகள் அதிகமாக இருக்கும். கடன் தொல்லை இருக்கும்.

தென் மேற்கு:நோய்கள் ,மனக்குழப்பங்கள் ஏற்படும். உணவு உடனே கெட்டுப் போகும்

மேற்கு:குடும்பத்தில் நிம்மதி இருக்காது. சண்டைச் சச்சரவுகள் வரும்.

வடமேற்கு:வீண் செலவுகள் ஏற்படும்.

வடக்கு:குடும்பத்தினரிடையே கருத்து வேறுபாட்டால் அடிக்கடிப் பிரச்சினை வரும்.

வடகிழக்கு:இங்கு சமையலறையை எக்காரணம் கொண்டும் அமைக்கக் கூடாது. இதனால் நிறைய தீய பலன்கள் உண்டாகும்.

சமையலறையில் குளிர்சாதன பெட்டியை வடமேற்கு மூலையிலும்,மாவாட்டும் எந்திரத்தை தென்மேற்கு மூலையிலும் வைக்க வேண்டும். சமையலறைக்கு அடுத்து படுக்கை

அறையிருந்தால் இரண்டு அறைகளையும் பிரிக்கும் சுவர் கனமாக இருக்க வேண்டும்.

சாப்பிடும்போது வடக்கு,கிழக்க நோக்கி அமர்ந்து உணவு சாப்பிடுவதால் உடல் நலம் சிறப்பாக இருக்கும். நோய்கள் நீங்கும்.

## சுவர்கள்– தூண்கள்

சுவர்கள்:வீட்டில் சுவர்கள் எல்லாம் தொடர்ச்சியாக இருக்குமாறுப் பார்த்துக் கொள்ள வேண்டும். சுவற்றிற்கு இடையில் இடைவெளி இருக்கக் கூடாது. சுவற்றில் வெட்டுக்களோ வளைவுகளோ இருக்கக் கூடாது. வீட்டுச் சுவர் இடிந்திருக்கவும் கூடாது. வீட்டில் மற்றப் பகுதிகளில் கட்டப்படும் சுவரின் கனத் தைவிட ஈசானியத்தில் கட்டப்படும் சுவரின் கனம் குறைவாக இருக்க வேண்டும். வீட்டிற்குள் எந்த சுவரும் பாதிக் கட்டப்பட்ட நிலையில் இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் அது அங்கு வாழும் குடும்பத் தலை வியையும் குழந்தை களையும் பாதிக்கும். படுக்கை அறையின் சுவரின் நடுவே செங் குத்தாக அமை வது போல் சுவர் எழுப்பக் கூடாது. இவ்வாறு எழுப்பும் போது தம்பதிகளின் குழந்தை பாக்கியம் பாதிக்கப்படும்.



தூண்கள்:வீட்டில் தூண்களின் எண்ணிக்கை இரட்டைப் படை எண்ணிக்கையில் இருக்க வேண்டும். ஆனால் பத்து ,இருப்பது ,முப்பது போன்ற எண்ணிக்கையில்தூண்கள் அமைக்கக் கூடாது.

தூண்கள் இல்லாமல் வீடு கட்டினால் வீட்டில் உள்ளவர்களின் அழகும்,ஆரோக்கியமும் தொடர்ந்து பாதிக்கப்படும். தூண்களின் மூலை சுவருக்கு வெளியே நீண்டிருக்கக் கூடாது. இவ்வாறு செய்யும் போது குத்துத் தாக்கம் ஏற்படும். பூஜை அறை,படிக்கும் அறை,வியாபாரம் தொழில் செய்யும் அறை போன்றவற்றில் கண்டிப்பாக தூண்களின் குத்துத் தாக்கம் வரக்கூடாது.

ஒரு வீட்டிற்கு அடிப்படையாக சுவர்களும் தூண்களும் அமைகிறது. எனவே அதில் வாஸ்து சாஸ்திரங்களைக் கடைப்பிடிப்பது சிறப்பானது. வீட்டில் நன்மைகள் பலவற்றை இது கொண்டு வரும்.

## நீர்த் தொட்டி

நீர்த்தொட்டி அமைத்து அதிலிருந்து தண்ணீரை மோட்டார் மூலம் வீட்டின் பல்வேறுப் பாகங்களுக்குக் கொண்டு செல்வது இன்று பல வீடுகளில் கடைபிடிக்கப் படுகிறது. அவ்வாறு நீர்த் தொட்டி அமைக்கும்போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் பற்றி பார்ப்போம்.

மாடியின் தென் மேற்கு திசையில் அமைப்பது மிகச் சிறந்தது. அங்கு நீர்த் தொட்டி அமைக்க வசதியில்லாத பட்சத்தில் தெற்கு அல்லது மேற்கு திசையில் நீர்த் தொட்டியை அமைக்கலாம். மொத்தம் உள்ள எட்டுத் திசைகளில் நீர்த் தொட்டி அமைப்பதினால் ஏற்படும் நன்மை தீமைகளை பற்றிப் பார்ப்போம்.

வடகிழக்கு:இங்கு நீர்த் தொட்டி அமைப்பதனால் வறுமையும்,துன்பமும் நீங்கும்.

கிழக்கு:இங்கு நீர்த் தொட்டி அமைப்பதினால் செல்வம் வேகமாக குன்றிப் போகும். குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கும்.

தென் கிழக்கு:இங்கு நீர்த் தொட்டி அமைப்பதினால் நன்மையும் இல்லை. தீமையும் இல்லை.

தெற்கு:இங்கு நீர்த் தொட்டி அமைப்பதினால் வீட்டில் செல்வம் செழிக்கும்.

தென்மேற்கு:இங்கு நீர்த் தொட்டி அமைப்பதினால் மிக நல்ல பலன்கள் உண்டாகும். வம்ச விருத்தி,செல்வ செழிப்பு,உடல் ஆரோக்கியம் என எல்லாம் சிறப்பாக இருக்கும்.

மேற்கு:இங்கு நீர்த் தொட்டி அமைப்பதினால் உடல் நலம் சிறப்பாக இருக்கும். பொருளாதார வளம் நன்றாகயிருக்கும். வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

வடமேற்கு:இங்கு நீர்த் தொட்டி அமைப்பதினால் நன்மையும் இல்லை. தீமையும் இல்லை.

வடக்கு:இத் திசையில் நீர்த் தொட்டி அமைப்பதினால் வீட்டில் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படும். கடன் தொல்லை,பெண்களின் உடல் நலம் கெடுதல் ஆகியவை உண்டாகும்.

## வாஸ்துவும் மனவளமும்

இயற்கையோடு ஒன்றி வாழ்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களே வாஸ்து கலையாக உருவாயிற்று. பூமியிலிருந்து சூரியன் 23. 5 டிகிரி வடகிழக்கு சாய்வாக நகர்ந்து செல்கிறது. இந்த சூரியனை மையமாக வைத்துதான் வாஸ்து கலையை உருவாக்கினார்கள். உயிரினங்கள் தோன்றுவதற்கு மூல காரணம் பஞ்ச பூதங்களின் கூட்டு சேர்க்கையே ஆகும். பஞ்ச பூதங்கள் என்பது நீர், நிலம், காற்று, நெருப்பு, வானம் ஆகும். இதில் ஒரு சக்தி குறைந்தாலும் உயிரினங்களின் தன்மைகள் மாறுபடும்.

இந்த இயற்கையின் 5 வித சக்திகளும் சம அளவில் வியாபித்து இருக்கிறது. இந்த 5 வித சக்திகளையும் வீட்டுக்குள் நிலை நிறுத்துவதே வாஸ்து கலை ஆகும். இந்த வாஸ்து கலையின்படி வீடுகளை கட்டும் போது அங்கு நல்ல வெளிச்சம், காற்று ஓட்டம், தங்கு தடையின்றி அமைகிறது. இதனால் நல்ல மனவளம் மனிதனுக்கு கிடைக்கிறது. மனவளம் நன்றாக அமைகிறது. மனவளம் என்பது உடல் வளத்தின் அடித்தளம்.

மனவளம் நன்றாக அமைய வேண்டுமானால் நம்மை சுற்றியுள்ள சுற்றுபுறங்கள் நன்றாக அமைய வேண்டும். இந்த சுற்றுப்புறத்தை இயற்கையாக உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட கலையே வாஸ்து கலை ஆகும்.

## கதவுகள்

வீட்டில் உள்ள எல்லாக் கதவுகளையும் ஒரே வகையான மரத்தால் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் சிறப்பானப் பலன்கள் உண்டாகும்இரண்டு வகையா. ன மரங்களில் கதவுகளைச் செய்வதால் நடுத்தரமானப் பலன்களும்,மூன்று வகையான மரங்களில் செய்வதால் தீமையானப் பலன்களும் விளையும். கதவுகளின் எண்ணிக்கை இரட்டைப்படையில் இருக்க வேண்டும். ஆனால் பத்து மற்றும் இருபது ஆகிய எண்ணிக்கையில் கதவுகள் இருக்கக் கூடாது. இதனால் தீமையானப் பலன்கள் விளை யும். வீட்டின் அமையும் கதவுகளின் எண்ணிக்கைக் கேற்ப பலன்கள் விளைகிறது.



ஒருவீட்டில் ஒரு கதவு மட்டும் இருந்தால் தீய பலன்கள் உருவாகும். இரண்டு கதவுகள் இருந்தால் நற்பலன்கள் விளையும். மூன்று கதவுகள் இருந்தால் விரோதம் அதிகரிக்கும். நான்கு கதவுகள் இருந்தால் நீண்ட ஆயுள் கிடைக்கும். ஐந்து கதவுகள் இருந்தால் அடிக்கடி குடும்பத்தில் உள்ளவர்களுக்கு

நோய்கள் உண்டாகும். ஆறு கதவுகள் இருந்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும். ஏழு கதவுகள் இருந்தால் ஆபத்துகள் அனுகும். எட்டுக் கதவுகள் இருந்தால் செல்வம் மேலும்மேலும் அதிகரிக்கும். ஒன்பது கதவுகள் இருந்தால் வியாதிகள் அண்டும். பத்துக் கதவுகள் இருந்தால் வீட்டில் அடிக்கடி திருட்டுப் போகும். பதினோருக் கதவுகள் இருந்தால் தீய பலன்கள் உருவாகும். பன்னிரண்டுக்கதவுகள் இருந்தால் குடும்பத்தில் உள்ளவர்கள் பார்க்கும் வியாபாரம் தொழில் சிறப்படையும். பதிமூன்று கதவுகள் இருந்தால் குடும்பத் தலைவரின் ஆயுள் குறையும். பதினான்கு கதவுகள் அமைந்திருந்தால் செல்வம் அதிகம் சேரும். ஒரு வீட்டில் பதினைந்து கதவுகள் அமைந்திருந்தால் தீய பலன்கள் உண்டாகும். வீட்டில் பதினாறுக் கதவுகள் இருந்தால் நற்பலன்கள் உருவாகும்.

கதவுகளின் எண்ணிக்கையில் சுற்றுச்சுவர்,அவுட் ஹவுஸ் போன்றவற்றில் இருக்கும் கதவுகளின் எண்ணிக்கையை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. கதவுகளை நீண்ட சதுர வடிவதில் சிறப்பு. கதவின் சட்டத்தை இரண்டு சுவர்கள் சேரும் மூலையில் பொருத்தாமல் மூலைக்கு இரண்டு அங்குலம் தள்ளியே அதைப் பொருத்த வேண்டும். இதனால் நற்பலன்கள் பல விளையும். கதவுகளை உட்பக்கமாக திறக்கும்படி அமைக்க வேண்டும்.

## அலுவலக வாஸ்து

தொழிற் கூடங்கள்,நிறுவனங்கள் செழித்து விளங்க அவற்றில் இருக்கும் அலுவலகங்களில் கீழ்க் கண்ட வாஸ்து முறைகளைக் கடைபிடிக்க வேண்டும். அலுவலக தலைமை அதிகாரியின் அறை அரை சதுர வடிவிலோ அல்லது செவ்வக வடிவிலோ அமைய வேண்டும்.

இந்த அறையை தென் மேற்குப் பகுதியில் அமைக்க வேண்டும். கிழக்கு அல்லது வடக்கு முகமாக தலைமை அதிகாரியின் இருக்கை இருப்பது நல்லது. அலுவலக வாயில் கிழக்குதிசை

நோக்கியோ அல்லது வடக்கு திசை நோக்கியோ இருக்க வேண்டும்.

வடக்கு முகமாகயிருந்தால் தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும் கிழக்கு முகமாகயிருந்தால் தொழில் முன்னேற்றதிற்கான புதுபுது யோசனைகள் தோன்றும். அலுவலகத்தின் நீளத்தைவிட அகலம் இரண்டு மடங்கு அதிகமாக இருப்பதும் கதவுகளின் அளவு 6 அடி 4 அங்குலம் 7அடி 4 அங்குலம் என்ற அளவில் இருப்பது சிறப்பு. தேனீர் வேளை இஉணவு இடைவேளைகளில் அலுவலர்கள் கூடும் இடம்தென்கிழக்கிலோ அல்லது வடமேற்கிலோ இருக்க வேண்டும். வரவு செலவு கணக்குப் பார்ப்பவர்கள் குபேரனின் திசையான வடக்குத் திசை நோக்கி அமர்ந்திருப்பது தொழிலில் நல்ல பணப் புழக்கத்தைக் கொடுக்கும்.

## பால்கனி

கிழக்கு,வடக்கு,வடகிழக்கு ஆகிய மூன்று திசைகளும் பால்கனி அமைக்க சிறந்த இடமாகும். பால்கனிக்கு மேலே கூரைப் பகுதியை அமைக்கலாம் அல்லது அமைக்காமல் விட்டுவிடலாம். இதனால் எந்த வாஸ்து பாதிப்பும் வராது. கிழக்கு பால்கனிக்கு கீழோ அல்லது சாய்வான கூரைப் பகுதிக்கு அடியிலோ அறை கட்டுவதென்றால் அதைத் தென் கிழக்கில் கட்ட வேண்டும். அந்த அறையின் கத வானது வடக்கு நோக்கி யிருக்கும்படி வடகிழக்கு மூலையில் அமைக்க வேண்டும்.



தெற்கு பால்கனிக்குக் கீழோ அல்லது சாய்வான கூரைப்பகுதிக்கு அடியலோ அறை கட்டு வதாகயிருந்தால் அந்த

அறையை தென்மேற்கில் கட்ட வேண்டும். அறையின் கதவானது கிழக்கு நோக்கிய ஈசானியத்தில் அமைக்கப் பட வேண்டும். மேற்கு பால்கனிக்குக் கீழோ அல்லது சாய்வான கூரைப் பகுதிக்கு அடியிலோ அறை கட்டுவதாகயிருந்தால் அந்த அறையை தென் கிழக்கு திசையில் கட்ட வேண்டும்.

அந்த அறையை வடக்கு நோக்கி வடகிழக்கு மூலையில் அமைக்க லாம். வடக்கு பால்கனிக்கு கீழோ அல்லது சாய்வான கூரைப் பகுதிக்கு அடியிலோ அறை கட்டுவதாக இருந்தால் அதை வடமேற்கில் கட்ட வேண்டும். அந்த அறையின் கதவானது கிழக்கு நோக்கி ஈசான்யத்தில் அமைக்கப்பட வேண்டும்.

ஒரு வீட்டில் நான்கு திசைகளிலும் பால்கனி அமைப்பதினால் எந்தவித வாஸ்து தோஷமும் ஏற்படுவதில்லை. தெற்கு அல்லது மேற்கில் பால்கனி அமைக்கும் போது அதை திறந்த வெளியாக விட்டுவிடக் கூடாது. கண்ணாடி அல்லது திரைச்சீலைஅல்லது பிரம்பு பாய் கொண்டு அதை மூடி வைக்க வேண்டும்.

## சுற்றுச் சுவர்

ஒரு வீட்டின் பாதுகாப்பு அதன் சுற்று சுவரை நம்பியேயிருக்கிறது. வெளி யிருந்து வாஸ்து தோஷங்கள் அண்டாதவாறும் சுற்றுச் சுவர் தடுக்கிறது. மனையின் தெற்கு ,மேற்குச் சுற்றுச்சுவர்களைவிட வடக்கு,கிழக்கில் உள்ள சுற்றுச் சுவர் சற்று குட்டையாக இருக்க வேண்டும்.

இதை சமன் செய்ய வடக்கு,கிழக்குச் சுவரில் கிரில்கள் அமைக்கலாம். சுற்று சுவர்கள் வீட்டின் பிரதான வாசலின் உயரத்தில் மூன்றில் இரண்டு பங்கு இருக்குமாறுப் பார்த்துக் கொள்ள வேண்டும். சுற்றுச் சுவரின் நான்கு மூலைகளும் சுத்தமாக இருக்க வேண்டம். அவற்றில் வெடிப்புகள் இருக்கக் கூடாது.

அவை வட்ட வடிவிலும் இருக்கக் கூடாது. வீட்டுக் கட்டிடத்திற்கும் சுற்றுச் சுவருக்கும் இடையே உள்ள இடைவெளி

நான்கு பக்கங்களிலும் சரிசமமாகயில்லாமல் வடக்கிலும், கிழக்கிலும் அதிகமாகவும், தெற்கிலும், மேற்கிலும் குறைவாகவும் இருக்குமாறுப் பார்த்துக் கொள்ள வேண்டும்தவிர்க்க முடியாத காரணத்தால் வீட்டுக் கட்டிடம் சுற்றுச் சுவரைத் தொட நேர்ந்தால் தெற்கு,மேற்குச் சுவரைக் கழிப்பறைக், குளியலறை ஆகியவை தொட்டுக் கொண்டிருக்குமாறுக் கட்டலாம்.

ஆனால் வடக்கு,கிழக்குச் சுற்றுச் சுவர்களை வீட்டின் எந்தப் பகுதியும் தொடக் கூடாது. கட்டிட வேலையை தொடங்கும் போதுதான் சுற்றுச் சுவர் கட்டும் பணியையும் தொடங்க வேண்டும்.

## புற்று நீக்கும் முறை

பாம்பு புற்று காலி மனையில் இருந்தால் அதில் வீடுகட்ட தயங்க வேண்டாம். முறைப்படி அந்தப் புற்றை அகற்றிவிட்டு பிறகு வீடு கட்ட தொடங்க வேண்டும். காலி இடத்தில் புற்று அமைந்தப் பகுதியைச் சுற்றி இனிப்பு கலந்த பால் ஊற்ற வேண்டும். மறுநாள் உடைந்த அரிசி மஞ்சள் கலந்த நாட்டுச் சர்க்கரை போன்றவற்றை புற்றைச் சுற்றித் தெளிக்க வேண்டும்.

இரண்டு நாட்கள் கழித்து பாம்பாட்டியை அழைத்து வந்து புற்றில் இருக்கும் பாம்புகளை பிடித்துச் செல்ல வைத்துவிட்டு புற்றை அகற்ற வேண்டும். பிறகு வீடு கட்டும் பணியை துவக்கினால் பாம்பு புற்று நீக்கப்பட்டதால் எந்த தோஷமும் உண்டாகாது.

## மரம் வைப்பதற்கும் வாஸ்து

வீட்டில் மரம், செடி கொடிகளை அமைப்பதற்கும் வாஸ்து முறைகள் உள்ளன. வீட்டின் தெற்கு, மேற்குப் பகுதிகளில் உறுதியான உயர்ந்த மரங்களை வளர்ப்பது சிறப்பானது. பூச்செடிகள், துளசி செடி, கீரை வகைகள், வாழை மரம், மாதுளை, கொய்யா போன்ற மரங்களை வளர்ப்பது சிறப்பு. தெற்கு மத்தியப் பகுதி, தென் மேற்கு பகுதி, மேற்கு மத்தியப் பகுதி, ஆகிய மூன்று திசை களிலும் மா, பலா, தென்னை

வேம்பு, அரச மரம், ஆலமரம், சப்போட்டா மரம், முந்திரி மரம், தைல மரம் போன்ற மரங்களை அமைத்துக் கொள்ளலாம்.

வீட்டில் புளிய மரம் கண்டிப்பாக வைக்கக் கூடாது. தென்மேற்கு மூலையில் கருவேல மரம் வைப்பது சிறந்த பலன்களைத்தரும்.

## வாகனம் நிறுத்தும் இடம்

வீட்டில் வாகனம் நிறுத்துவதற்கு தனி ஷெட் அமைத்தால் அதை வடமேற்கு அல்லது தென் கிழக்குத் திசையில் கட்ட வேண்டும். வடகிழக்கில் அதிக பாரத்தை ஏற்றக் கூடாது என்பதால் அங்கு மட்டு கார் ஷெட்டை அமைக்கக் கூடாது. வாகனம் நிறுத்தும் ஷெட் வீட்டின் பிரதான கட்டிடத்தைத் தொடாதவாறு அமைக்க வேண்டும்.

வடக்குச்சுற்றுச் சுவரையும் தெற்குச் சுற்றுச் சுவரையும் அது தொடக் கூடாது. வாகன ஷெட்டின் கதவு உட்பக்கமாக திறக்கும்படி அமைப்பது சிறப்பு. வாகனங்களை எப்போதும் வடக்கு முகமாகவே நிறுத்தி வைக்க வேண்டும். அப்படி நிறுத்த வாய்ப்பில்லை யென்றால் கிழக்கு முகமாக நிறுத்த லாம். இதனால் வாகனம் பழுதாவது தடுக்கப்படுகிறது. வடமேற்கு திசையில் வாகனம் நிறுத்தும் இடத்தைக் கட்டினால் வடமேற்கு மூலையை மூடுவது போலவோ அல்லது வடக்குச் சுற்றுச் சுவரைத் தொடுவது போலவோ கட்டக் கூடாது.

தென் கிழக்குத் திசையில் வாகனம் நிறுத்தும் இடத்தைக் கட்டினால் தென்கிழக்கு மூலையை மூடுவது போலவோ அல்லது கிழக்குச் சுற்றுச் சுவரைத் தொடுவது போலவோ கட்டக் கூடாது. தென்மேற்கு திசையில் வாகனம் நிறுத்தும் இடத்தைக் கட்டினால் தென் மேற்கு மூலையை மூடுவதுபோல் கட்ட வேண்டும்.

வாகனம் நிறுத்தும் இடத்தில் வாஸ்து முறைகளைக் கடைபிடிக்கும்போது வாகன பழுது,விபத்து போன்றவைத் தவிர்க்கப்படும்.

## கிரகபிரவேச வாஸ்து

வீடு கட்டி முடிந்த பிறகு அதில் நல்ல நாள் பார்த்து கிரஹப்பிரவேசம் செய்து குடியேருவர். கிரகஹப் பிரவேசம் செய்ய வேண்டிய முறைப்பற்றிப்பார்ப்போம்.

புது வீட்டின் தென்மேற்கு அறையிலோ,தெற்கு அல்லது மேற்கு மத்திய அறையிலோ கிரஹப் பிரவேசம் செய்வதற்கான ஹோமகுண்டங்கள் அமைக்க வேண்டும். கிரஹப் பிரவேசத்தின் போது அர்ச்சகர்கள்,உரிமையாளர்கள், அமரும் இடம் மற்றும் சாமிப் படங்கள் இருக்கும் இடம் ஆகியவை வரைபடத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதுபடி அமைத்து பூசணிக்காய். தேங்காய் எலுமிச்சம் பழம் அகியவைகள் மீது கற்பூரம் ஏற்றி வீடு,குடும்ப உறுப்பினர்கள், கட்டிட அமைப்பாளர், உதவியாளர் ஆகியவர்மீது திருஷ்டி சுற்றிப் போட வேண்டும். பிண்பு பூசணிக்காயை வீட்டின் முன்பு அல்லது முச்சந்திகளில் உடைக்க வேண்டும். கிரஹப்பிரவேசம் முடிந்த பின்பு கட்டிட அமைப்பாளர்களுக்கும்,அவரின் உதவியாளர்களுக்கும் தாம்பூல தட்டில் பாக்கு,தேங்காய், பழம்,புத்தாடை,பணம் கொடுத்து வீட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும். பிறகு விருந்தாளிகளுக்கு உணவு அளிக்க வேண்டும். இந்த விருந்தில் ஏழை எளியவர்களும் கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும். இது போன்று முறையாக கிரஹப்பிரவேசம் செய்யும் போது வீடு செழிக்கும். வீட்டில் உள்ளவர்கள் சிறப்புடன் வாழ்வர்.

## இந்தியாவின் வாஸ்து நிலை

உலகிலேயே ஞானிகள் ,ரிஷிகள் ,சித்தர்கள்,அதிகமாக அவதரித்த நாடு இந்தியாதான் பல்வேறு வளங்கள் இருந்தும் நாம் மேலை நாடுகளைப் போல முன்னேதாதற்குக் காணம் இந்தியாவின் அமைப்பில் வாஸ்து குறைபாடு இருப்பதுதான். வடக்கே உள்ள இமைய மலை நமக்குப் பெருமையளிப்பதாகயிருந்தாலும் வாஸ்து முறைப்படி அது நமக்குப் பாதகமான விஷயமே. நம் நாட்டிற்கு தெற்கு, மேற்கு

திசைகளில் கடல் அமைந்திருப்பதும் நமக்கு பாதமான வாஸ்து அமைப்பே.

கிழக்கிலும்,வடக்கிலும் கடல் அமைந்திருப்பது நமக்கு சாதகமான வாஸ்து அமைப்பு. எவ்வளவு தடைகளைச் சந்தித்தாலும் நம் நாடு முன்னேறிக் கொண்டிருப்பதற்கு இதுவேக் காரணம். இந்தியாவில் உள்ள மற்றமாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டின் அமைப்பு வாஸ்து சாஸ்திரப்படி சிறப்பாக உள்ளது. தமிழ் நாட்டிற்கு வாஸ்து பலம் அதிகம்.

## வாஸ்து துளிகள்

மதில் கேட்:— மொத்த இடத்திற்கு பாதிக்கும் வடபுறம் கிழபுறம்தான் வைக்க வேண்டும். வீட்டு தலைவாசலுக்கு எதிரில் வரவில்லை என்றால் மேலும் ஒரு கேட் வைக்கவும், எப்பொழுதும் நேர் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மற்றும் வடகிழக்கு திசையை கேட் பார்க்க வேண்டும். இது மிக மிக முக்கியம்.

## மாடிப்படிகள்:—

தெற்கும், மேற்கும் பார்த்துத்தான் முதலில் ஏற வேண்டும். பின் எத்திசையிலும் திரும்பலாம். வடக்கு, வடமேற்கு, கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் மாடிப்படி வைத்துக் கொள்ளலாம். மாடியில் உச்ச பகுதியில் நுழைய வேண்டும். முதலில் வலது காலை வைத்து ஏறி அறையினுள் வலது கால் வரும்படி அமைக்க வேண்டும்,

திண்ணைகள், கிழக்கு வடக்கு வாசல் வீடுகளுக்கு வீட்டுத்தரை மட்டத்தை விட தாழ்வாகவும், மேற்கு தெற்குப் பார்த்த வீடுகளுக்கு உயரமாகவும் இருக்க வேண்டும்.

ரோடு குத்து, கிழக்கு, வடக்கு, வடகிழக்கு, தெற்கு தென்கிழக்கு, மேற்கு வடமேற்கு மட்டுமே நல்லது.

வீட்டில் தெற்கும், மேற்கும் பழம் தரும் மரங்களையும் வடக்கும், கிழக்கும் வடகிழக்கும் செடிகளையும் வளர்க்க வேண்டும்.

## கர்ப்பமும் வாழ்க்கை வளமும்

ஒரு வீடு எந்த கர்ப்பத்தில் அமைந்திருக்கிறது என்பதைப் பொருத்து அங்கு வசிப்பவர்களுக்கு நன்மை தீமைகள் ஏற்படுகின்றன. ஒரு வீட்டின் நீளத்தை அதன் அகலத்தால் பெருக்கி வரும் அளவே கர்ப்பம் என வழங்கப்படுகிறது. கர்ப்பங்கள் மொத்தம்எட்டுவகைப்படும். த்வஜகர்ப்பம், தூம கர்ப்பம், சிம்ம கர்ப்பம், நாய் கர்ப்பம், விருஷப கர்ப்பம், கழுதை கர்ப்பம், யானை கர்ப்பம், காக்கை கர்ப்பம் என்பன அவை.

ஒரு வீட்டின் நீளத்தை அதன் அகலத்தால் பெருக்கி வரும் தொகையை மீண்டும் ஒன்பதால் பெருக்கவேண்டும். அப்போது கிடைக்கும் எண்ணை எட்டால் வகுக்க வேண்டும். அவ்வாறு வகுக்கும் போது மீதி 1 வந்தால் த்வஜ கர்ப்பம். 2 வந்தால் தூம கர்ப்பம், 3 வந்தால் சிம்ம கர்ப்பம், 4 வந்தால் நாய் கர்ப்பம், 5 வந்தால் விருஷப கர்ப்பம். 6 வந்தால் கழுதை கர்ப்பம். 7 வந்தால் யானை கர்ப்பம். 0 வந்தால் காக்கை கர்ப்பம். ஒரு வீட்டின் கர்ப்பம் எந்த கர்ப்பமாக அமைந்தால் என்ன கர்ப்பம் என்று பார்ப்போம்.



த்வஜ கர்ப்பம்: வீட்டில் செல்வம் செழித்தோங்கும்.

தூம கர்ப்பம்: வீட்டில் உள்ளவர்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

சிம்ம கர்ப்பம்: நோய்கள் அண்டாது. அப்படியே அண்டினாலும் உடனடியாகக் குணமாகிவிடும். எதிரிகளின் சதி எளிதில் முறியடியும். செல்வம் விரைவாகச் சேரும்.

நாய் கர்ப்பம்: குடும்ப உறுப்பினர்கள் வியாதிகளால் பாதிக்கப்படுவார்கள்.

விருஷப கர்ப்பம்: வாழ்க்கையில் முன்னேறுவதற்கு கடுமையானப் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

கழுதைக் கர்ப்பம்: பணம் சம்பாதிக்க படாது பாடுபட வேண்டியிருக்கும். ஏதாவது கவலை வீட்டில் இருந்து கொண்டேயிருக்கும். யானைக் கர்ப்பம்: வீட்டில் உள்ளவர்களின் வாழ்க்கை எல்லா வகையிலும் சிறப்பானதாக அமைந்திருக்கும். சொகுசான வாழ்க்கை வாழ்வார்கள்.

காக்கை கர்ப்பம்: வீட்டில் உள்ளவர்கள் பல்வேறு துன்பங்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

## கழிப்பறை

கழிப்பறையை வீட்டின் தென்கிழக்கு அல்லது வடமேற்கு மூலையில் அமைப்பது சிறந்தது. எந்தக் காரணத்தைக் கொண்டும் புனிதமான பகுதியான வடகிழக்கு மூலையில் மட்டும் கழிப்பறையை கட்டக் கூடாது. அப்படி அமைக்கும்பட்சத்தில் வீட்டில் பொருளாதார நெருக்கடிகள் அடிக்கடித் தலைகாட்டும். குழந்தைகளுக்குப் பல்வேறு சிக்கல்கள் உண்டாகும். தெற்கு அல்லது மேற்குத்திசைகளில் கழிப்பறையைக் கட்ட நேர்ந்தால் அதன் தள மட்டம் சற்று உயர்ந்து இருக்க வேண்டும்.

கழிவறைக்குள் மலம் கழிக்கும் கோப்பையை வடக்கு அல்லது தெற்கு நோக்கி அமைக்க வேண்டும். கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அமரும்படி கோப்பைகளை அமைப்பது தீமையை உண்டு பண்ணும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.



எட்டுத் திசைகளில் கழிவறை அமைப்பதால் உண்டாகும் பலன்களைப் பார்ப்போம்:—

தென் கிழக்கு: நன்மையான பலன்களே ஏற்படும். வடகிழக்கு: தீமையான பலன்கள் அதிகம் உண்டாகும்.

தென்மேற்கு: இங்கு கழிப்பறைக் கட்டுவதினால் பாதகமும் இல்லை. சாதகமும் இல்லை.

வடமேற்கு: கழிப்பறை அமைக்க மிகப் பொருத்தமான திசை வடமேற்கு திசையே.

இந்தக் கழிப்பறையைப் பயன்படுத்து பவர்களுக்கு ஏராளமான நன்மைகள் உண்டாகும். கிழக்கு:எடுக்கும் காரியங்களில் முட்டுக் கட்டைகள் தோன்றிக்கொண்டேயிருக்கும். ஆண்கள் அதிகம் பாதிக்கப் படுவார்கள். தெற்கு:தீமைகள் அதிகம் உண்டாகும். மேற்கு:நன்மையான பலன்கள் உருவாகும். வடக்கு:பெண்களுக்கு பல்வேறுவிதமான இடைஞ்சல்கள் உண்டாகும்.

## தாழ்வாரம்

வடக்கு மற்றும் கிழக்குத் திசைகளே தாழ்வாரம் அமைக்க ஏற்றத் திசையாகும். கட்டிடத்தின் மேல் கூரையைவிட தாழ்வாரத்தின் மேல்கூரை சற்றுத் தாழ்வாக இருக்க வேண்டும். தகரத் தினால் தாழ்வாரத்திற்குக் கூரைப் போடக் கூடாது. மாடிகளில் தாழ்வாரம் கட்டும் போது அதை வடக்கு அல்லது கிழக்குத் திசைகளில் கட்ட வேண்டும். ஒரு வீட்டின் நான்கு திசை களிலும் தாழ்வாரங்கள் இருப்பது மிகச் சிறப்பான பலன்களைக் கொடுக்கும். இவ்வாறு நான்கு தாழ்வாரங்கள் அமைக்கும்போது தெற்கு தாழ்வாரத்தின் உயரமும் அகலமும் வடக்குத் தாழ்வாரத்தின் உயரம்,அகலத்தைவிட சற்று அதிகமாக இருக்க வேண்டும்.

வடக்குத் தாழ்வாரம் தெற்குத் தாழ்வாரத்தைவிட சற்று தாழ்வாக இருக்க வேண்டும். கிழக்குத் தாழ்வாரத்தின் உயரமும் அகலமும் மேற்குத் தாழ்வாரத்தின் உயர அகலங்களைவிட சற்றுக் குறைவானதாக இருக்கும். கிழக்குத் தாழ்வாரம் மேற்குத் தாழ்வாரத்தைவிட சற்று தாழ்வாகயிருக்க வேண்டும். மேற்கு திசையில் மட்டும் தாழ்வாரத்தை கண்டிப்பாக அமைக்கக் கூடாது. மேற்கில் அமைக்க நேர்ந்தால் கிழக்கிலும் தாழ்வாரம் அமைக்க வேண்டும்.

ஒரு வீட்டின் வடக்கிலும் கிழக்கிலும் தாழ்வாரங்கள் அமைந்தால் அங்கு வசிப்பவர்களின் உடல் நலம் சிறப்பாக இருக்கும். நோய் உடனடியாக நீங்கும். வடக்கு திசையில் மட்டும் தாழ்வாரம் அமைந்துள்ள வீட்டில் வசிக்கும் பெண்களின் வாழ்க்கையும் ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும். கிழக்கு திசையில் மட்டும் தாழ்வாரம் அமைக்கப்படும்போதும் இதே போன்ற பலன்கள் கிடைக்கும். தெற்கு திசையில் மட்டும் தாழ்வாரம் அமைக்கப்பட்டால் பெண்களின் உடல் நிலை பாதிப்பும் மேற்கில் மட்டும் தாழ்வாரம் அமைக்கப் பட்டால்அங்கு வாழும் வீட்டில் வசிக்கும் ஆண்களின் உடல் நிலையும் பாதிப்பு ஏற்படும்.

## கிணறு

கிணறு அமைப்பதில் வாஸ்து சாஸ்திரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கிணறு அமைப்பதில் வாஸ்து சாஸ்திரத்தைக் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும். கிணறு இரண்டு பகுதியாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று தரைக்கு கீழேயிருக்கும் பகுதி மற்றொன்று தரைக்கு மேலேயிருக்கும் பகுதி. தரைக்கு மேல் உள்ள பகுதியை சதுர வடிவிலும் வட்ட வடிவிலும் அமைக்கலாம்.

ஆனால் தரைக்கு கீழ் உள்ளப் பகுதியை சதுர வடிவில்தான் அமைக்க வேண்டும் என்கிறது வாஸ்து. ஈசான்ய திசையில் கிணறு வெட்டுவது சிறப்பான பலன்களைத் தரும். இதனால் எப்போதும் கிணற்றில் தண்ணீர் இருந்து கொண்டேயிருக்கும். ஆனால் கட்டிடத்தின் வடகிழக்கு மூலையும் மனையின் வடகிழக்கு மூலையும் சந்திக்கும் நேர் கோட்டில் கிணறு வெட்டக்கூடாதுஒவ்வொரு திசையிலும் கிணறு வெட்டுவதனால் ஏற்படும் பலன்களைப் பார்ப்போம்.



வடகிழக்கு:இத்திசையில் கிணறு வெட்டுவதனால் வீட்டில் செல்வம் மேலும்மேலும் பெருகிக் கொண்டேயிருக்கும். குடும்ப உறுப்பினர்களின் விருப்பம் எளிதில் நிறைவேறும். வம்ச விருத்தி சிறப்பாகயிருக்கும். பிள்ளைகளின் வாழ்வு செழிக்கும். குடும்பத்தின் அந்தஸ்து கவுரவம் உயரும்.

கிழக்கு :கிழக்கு திசையின் மத்தியப் பகுதியில் கிணறு வெட்டும்போது அதிர்ஷ்டம் வீட்டில் தொடர்ந்து இருக்கும். குழந்தை பாக்கியம் நன்றாக யிருக்கும் . ஆனால் இத்திசையில் கிணறு அமைக்கும்போது அப்பகுதியை சற்று மேடாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

தென்கிழக்கு:இங்கு கிணறு வெட்டுவதினால் தீய பலன்களே உருவாகும். குறிப்பாக வீட்டில் உள்ள ஆண்களுக்கு இது அதிக கெடுதலை

தரும். தெற்கு:தெற்கில் கிணறு அமைப்பது வீட்டில் உள்ள பெண்களுக்கு நல்லதல்ல.

தென்மேற்கு:இந்த திசையும் கிணறு அமைப்பதற்கு ஏற்ற திசையல்ல. இங்கு கிணறு அமைப்பதனால் விபத்து,நோய் நொடிகள் போன்றவற்றை சந்திக்க நேரிடும்.

மேற்கு:இத்திசையில் கிணறு வெட்டுவதும் தவறு. இதனால் பொருள் விரையம் ஏற்படும்

வடமேற்கு:இங்கு கிணறு அமைப்பது வியாபாரம் செய்பவர்களுக்கு ஏற்றதல்ல. நஷ்டம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

வடக்கு:இங்கு கிணறு அமைப்பதனால் வியாபாரம் செழித்து நல்ல லாபம் கிட்டும். தொழில் பல்கிப் பெருகும்.

## தலைவாசல்

நமக்கு வாய் எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு ஒரு வீட்டிற்கு தலை வாசல் முக்கியம். தலைவாசலில் நான்குச் சட்டங்கள் இருக்கும். அவற்றில் கீழ் குறுக்குச் சட்டத்திற்கு அதிக முக்கியத் துவம் உண்டு. வெளியிலிருந்து நோய்க் கிருமி கள் வீட்டிற்குள் வருவதைத் தடுத்து வீட்டு உறுப்பினர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது இந்தக் கீழ்க் குறுக்குச்

சட்டம்தான். வீட்டின் தலைவாசலுக்கும், பின்வாசலுக்கும் கீழ்க் குறுக்குச் சட்டம் இருக்க வேண்டியது அவசியமாகும். தலை வாசலுக்கு நேர் எதிரே பின் வாசல் அமைய வேண்டும்.



தலைவாசலைவிட பின் வாசல் உயரமாகயிருக்கக் கூடாது. வீட்டில் ஒரு தலைவாசல் மட்டும் வைத்தால் அதை வீட்டின் வடக்குஅல்லது கிழக்குப் பக்கத்தில் வைப்பதே சிறந்த பலன்களைத் தரும். வீட்டின் கிழக்கிலும் தெற்கிலும் வீதிகள் இருக்கும்பட்சத்தில் கிழக்குப் பாகத்திலும்,வடக்கிலும் தெற்கிலும் வீதிகள் இருக்கும் பட்சத்தில் வடக்கு பாகத்திலும் தலைவாசல் வைக்க வேண்டும். வீட்டிற்கு கிழக்கிலும்,மேற்கிலும் வீதிகள் இருக்குமானால்கிழக்குப் பாகத்திலும், வீட்டிற்கு வடக்கு,கிழக்கு ஆகிய பகுதிகளில் வீதிகள் இருக்குமானால் வடக்கிலும் தலை வாசலை அமைக்க வேண்டும். இரண்டு தலைவாசல் அமைக்கும் பட்சத்தில் அவற்றை கிழக்கு–தெற்கு அல்லது கிழக்கு–மேற்கு அல்லது கிழக்கு –வடக்கு பாகங்களில் அமைக்க வேண்டும்.

மூன்று தலை வாசல் அமைக்கும் போது கிழக்கு–வடக்கு–மேற்கு ஆகிய மூன்று திசைகளில் அமைக்க வேண்டும். இவ்வாறு மூன்று தலைவாசல் அமைப்பதுசிறப்பான பலன்களைத் தரும். கிழக்கு–வடக்கு–தெற்கு ஆகிய மூன்று திசைகளில் வைக்கலாம். ஆனால் கிழக்கு–மேற்கு–தெற்கு ஆகிய மூன்று திசைகளில் மட்டும் நுழைவாசல்களை அமைக்கக் கூடாது.

பெரிய வீடுகளில் நான்கு தலைவாசல்கள் அமைக்கும் போது வடக்கு—கிழக்கில் உள்ள தலைவாசல்கள் மேற்கு—தெற்கில் உள்ள தலைவாசல்களைவிட சற்று உயரம் அதிகமானதாகயிருக்க வேண்டும்.

## வாசற்படி

வாசற்படியைப் பொருத்தவரை படியின் அங்குலம் ஆறு அல்லது ஏழு அங்குலத்திற்குள் இருக்குமாறுப் பார்த்துக் கொள்ள வேண்டும். படியின் அகலம் ஒன்பது அல்லது பத்து அங்குலத்திற்குள் இருக்க வேண்டும். வாசற்படியின் எண்ணிக்கைக்கு ஒற்றைப்படை, இரட்டைப் படை என எந்த நிபந்தனையும் விதிக்கப்பட வில்லை நம் விருப்பப்படி எத்தனை படிகளை வேண்டு மானாலும் அமைத்துக் கொள்ளலாம்.



வடக்குப் பார்த்த மற்றும் கிழக்குப் பார்த்த வாசல்களுக்கு படி கட்டும் போது நீண்ட சதுர வடிவத்தில் கட்டுவது சிறப்பு. கண்டிப்பாக அரைவட்ட வடிவத்தில் கட்டக் கூடாது. தலைவாசலின் வாசற்காலுக்குக் கீழே மரத்தினால் ஆன படி அமைக்க வேண்டும். அப்படி அமைக்கும் போது அதற்கு கீழே

நவரத்தினங்கள் ,மந்திரத் தகடுகள்போன்றவற்றைப் புதைத்து வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதானால் தீய சக்திகள் வீட்டிற்குள் நுழைவது தவிர்க்கப்படும். நன்மைகள் விளையும்.

போர்டிகோ

வீட்டின் முன் பகுதியில் வாகனங்கள் நிறுத்துவதற்காகவும்,அழகிற்காகவும் அமைக்கப்படும் போர்ட்டிகோ வடக்கு,வடகிழக்கு,கிழக்குத் திசைகளில் மட்டுமே அமைக்கப்பட வேண்டும். போர்ட்டிக்கோ அமைக்கும் போது அதன் முனைப்பகுதி தரையை நோக்கித் தாழ்ந் திருக்கும் வகையில் அமைத்துவிடக் கூடாது. உயர்ந்தும்,நிமிர்ந்தும் அது இருக்க வேண்டும். வீட்டின் தலைவாசலை வடகிழக்குத் திசையில் அமைத்தால் போர்டிகோவை எந்தத் திசையில் வேண்டு மானாலும் அமைக்கலாம். வடக்கு நோக்கிய வீட்டில் தலைவாசல் கிழக்கு சார்ந்த வடகிழக்கில் வைக்கப்படாமல் சற்று மேற்கே தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்கிற பட்சத்தில் போர்டிகோவை வடகிழக்கு மூலைவரை வருமாறுப் பார்த்துக் கொள்ள வேண்டும். பொதுவாக போர்டிகோவின் உயரம் வராண்டாவின் உயரத்திற்கு சமமாக அல்லது சற்றுக் குறைவாக இருக்கலாம். ஆனால் உயரமாக இருக்கக் கூடாது.